**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 11823 / 2013 / எம்சி. 8 நாள் : 28.12.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.
-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **30.12.2013 திங்கள்கிழமை காலை 10.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - டிசம்பர் 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் | |
| ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பொறியியல் பிரிவு - பிரதான அலுவலக வளாகத்திலேயே புதிய மாமன்ற கூட்ட அரங்கம் ரூ.12.65 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டுவதற்கு அரசிடம் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி கோருவது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி ஆரம்பப்பள்ளி விளையாட்டு மைதானங்களை புதுப்பித்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்களை கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொது சுகாதாரம் - பொதுசுகாதார ஆய்வுக்கூடம் -மண்டலத்திற்கு ஒன்று வீதம் தொடங்குதல் -செலவினங்கள் ஏற்றல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பணியமைப்பு – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு பிரிவு–வரைவு அலுவலர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களை மாநகராட்சி பணிக்கு ஈர்த்துக் கொள்ளுதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பணியமைப்பு – திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர், சேலம் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் வேண்டுதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு – நகர்ப்புற பகுதியில் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை இல்லாத நடவடிக்கை எடுத்தல் – 21 இடங்களில் நம்ம கழிப்பிடங்கள் இயக்கி மற்றும் பராமரித்தல் பணி ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் புதியதாக குடிநீர் இணைப்பு கோரியவர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் - கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | கிழக்கு மண்டலம் - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 75-க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் எரிவாயு தகன மேடை - ஈஷா பவுண்டேசன் அறக்கட்டளைக்கு பராமரிப்பு காலம் நீட்டிப்பு செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | மேற்கு மண்டலம் - திரு.எஸ்.மணி துப்புரவு பணியாளர் வீடு கட்டிக் கொள்ள முன் பணம் அனுமதித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | நகரமைப்பு பிரிவு – பொது உபயோக கட்டிடங்களில் கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்த ஆணையிட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது - அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் பிரசுரிக்கப்பட்டது – அரசாணை மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக. |
| 11 | பொது சுகாதாரம் - 40 மைக்ரான் தடிமன் அளவுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பைகளை மாநகராட்சிப் பகுதிகளில் உற்பத்தி செய்வோர், மொத்த விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர்களுக்கான அபராதத்தொகை அதிகப்படுத்தி நிர்ணயம் செய்வது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது - தொடர்பாக. |
| 12 | பொது சுகாதாரப் பிரிவு - நகர் நல மையங்கள் - செவிலியர் பள்ளி மாணவிகள் பயிற்சி பெற அனுமதி அளித்தல் - கட்டணம் உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 13 | கோயம்புத்தூர் மாநகராட்சி ‘‘பண்ணை பசுமை காய்கறித் திட்டம் கடை-மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு சிவானந்தா காலனி வணிக வளாகத்தில் கடை எண்.5-க்கு மாதவாடகை ரூ.2500/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. கூடுதலாக ஒரு கடையினை ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | மத்திய மண்டலம் - வார்டு எண்.68 மத்திய மண்டலத்திற்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.1 மற்றும் 2 உரிமம் ரத்து செய்து மறு ஏலம் கோர அனுமதி கோருவது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 15 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் -வார்டு எண்.82- N.H. ரோட்டில் விக்டோரியா ஹால் மேற்கில் உள்ள இரண்டு கடைகள் ஏலஇனத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட்டது – மீண்டும் ஏனஇனத்தில் சேர்த்து மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வது –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 16 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.82 N.H. ரோட்டில் உள்ள கடையை அன்னூர் சர்வோதய சங்கத்திற்கு கோரியது – மாமன்றத்தில் பரிசிலனையில் உள்ளது – தற்போது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 17 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - வார்டு எண்.80 ராஜவீதி கார் பார்க்கிங் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள 3 கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது – வாடகை நிர்ணயித்தல் - மாமன்றஅனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 18 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.81 வெரைட்டிஹால் சாலை திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடையை – கோவைபுதூர் நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை சி.சி.2382-க்கு ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 19 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - 2013-2016-ம் ஆண்டுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் - இராஜ வீதி மருந்தக வளாகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம்- உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 20 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - உக்கடம் புதிய மீன்மார்க்கெட்டில் உள்ள நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலித்தல் மற்றும் இரண்டு சக்கர வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்- உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 21 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம்- 2005-06 முதல் 2012-2013 முடிய பல்வகை கேட்பு குத்தகை இனங்களின் காசோலைத் தொகை வரவு வைக்கப்படாதது தொடர்பான சிறப்புத் தணிக்கை அறிக்கை - திரு.M.A.கலீல்ரஹ்மான் குத்தகைதாரரை கருப்புப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் மாநகராட்சி ஏல இனங்களிலிருந்து நீக்கம் செய்தல் மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 22 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - வார்டு எண். 72 அவினாசி சாலை மாநகராட்சி வணிகவளாக கடைகள் - பிரஸ்கிளப் மற்றும் கோயம்புத்தூர் ஜெர்னலிஸ்ட் அசோசியேசன் கடை வாடகையினை உயர்வு செய்தது – மறுபரிசீலனை செய்தல் - மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக. |
| 23 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.25 மாநகராட்சி வணிக வளாக கடைகள் - கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை) தரைதளம் மற்றும் முதல் தளம் - புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக. |
| 24 | மத்திய மண்டலம் - வார்டு எண்.50, வார்டு எண்.72, வார்டு எண்.25 மற்றும் வார்டு எண்.54 கீழ் காணும் வணிக வளாகத்தில் உள்ள கடைகள் - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – ஒப்படைத்தல் மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக. |
| 25 | மேற்கு மண்டலம் வார்டு எண். 22 விவேகா மகளிர் சுய உதவிக்குழு நடத்தி வந்த நியாய விலை கடை எண். 62 ( கதவு எண். 14) காமராஜபுரம் – சிங்காநல்லூர் நகரக்கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது – மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 26 | மேற்கு மண்டலம் - குத்தகை - வருடாந்திர குத்தகை இனங்கள் 2014-15-ம் ஆண்டிற்கு மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு 5% உயர்வு செய்து பொதுஏலம் கோர அனுமதி வேண்டி பொருள் வைப்பது – மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக |
| 27 | மேற்கு மண்டலம் - குத்தகை - வருடாந்திர குத்தகை இனங்கள் 2014-15-ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறுஏலம் கொண்டு வரஅனுமதி வேண்டுதல் - மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக |
| 28 | மேற்கு மண்டலம் வார்டு எண். 24, சிங்காநல்லூர் கூட்டுறவு பண்டகம் நடத்தும் நியாயவிலைக் கடை எண்.57EI001 ஆசாத் வீதி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் மாநகராட்சி – வார்டு எண். 24 சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள கட்டிடத்திற்கு மாற்றம் செய்து மேற்படி கட்டிடத்திற்கு பொதுபணித் துறை மதிப்பீட்டின் படி வாடகை தொகை நிர்ணயம் செய்து மேற்படியாருக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது – தொடர்பாக. |
| 29 | வடக்கு மண்டலம் - 2014-2015 ம் ஆண்டு - குத்தகை இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு உரிமம் புதுப்பிப்பது மற்றும் உரிம காலம் முடிவடைந்த இனத்திற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது - மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக. |
| 30 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஏலக் கோரிக்கையின் அடிப்படையில் கடைகளை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோருவது - தொடர்பாக. |
| 31 | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 4க்கு உட்பட்ட அப்பநாயக்கன்பாளையம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள ரேசன் கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது – மாமன்றத்தின் அனுமதி கோருவது - தொடர்பாக. |
| 32 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 செங்காடு பகுதியில் முதல் தளத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நடைபெற்ற நான்காவது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - மாமன்றத்தின் அனுமதி கோருவது - தொடர்பாக. |
| 33 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - மாமன்றத்தின் அனுமதி கோருவது - தொடர்பாக. |
| 34 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - 2014-17ம் மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2014-15ம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்து புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக |
| 35 | கிழக்கு மண்டலம் - வார்டு எண் 57 - ற்குட்பட்ட சின்னசாமி லே அவுட் பகுதியிலுள்ள வணிகவளாகக் கடை எண் 2 -ற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 109, நாள் 22.10.2013 - ன்படி மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.11.2013 –ம் தேதி நடைபெற்றது - மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக. |
| 36 | கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்திமிடம் குத்தகைக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக. |
| 37 | மேற்கு மண்டலம் - குத்தகை - வருடாந்திர குத்தகை இனங்கள் 2014-15-ம் ஆண்டிற்கு மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு 5% உயர்வு செய்து பொதுஏலம் கோர அனுமதி வேண்டி பொருள் வைப்பது – மாமன்ற அனுமதிகோருதல் - தொடர்பாக |
| 38 | தெற்கு மண்டலம் – வருடாந்திர குத்தகை இனங்கள் 2014–15ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறு ஏலம் கொண்டு வரவும், மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொது ஏலம் கோர அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| 39 | நகரமைப்புப் பிரிவு - வடவள்ளி கிராமம் க.ச.ண்.72/2 A1-ல் உள்ள 47 செண்டில் பேருந்து திருப்பு முனையம் அமைக்க மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் - மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 40 | பொறியியல் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண் - 13 - ஆர்.கே.நாயுடு லே அவுட் முதல் கோவில் மேடு தெக்கலூர் சாலை வரை விவசாய கல்லூரி வளாகத்தில் குழாய் வடிகால் அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 41 | கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகள் கவுண்டம்பாளையம் வடவள்ளி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் பில்லூர் திட்டம் IIலிருந்து குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யவும் – இப்பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ4255 லட்சத்துக்கு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக |
| 42 | பொது சுகாதாரம் - பிரசவித்த தாய்மார்கள் மற்றும் பிறந்த குழந்தைகள் - நைட்டி மற்றும் குழந்தைகளுக்கான துணிகள் வழங்குவது – மாமன்ற அனுமதி வேண்டுவது – தொடர்பாக. |
| 43 | பொது சுகாதாரம் - மாநகராட்சிப் பகுதிகளில் உபயோகப்படுத்தி கழிவாகும் பிளாஸ்டிக் மற்றும் இதர பொருட்களை சாலையோரங்கள், பொது இடங்கள் மற்றும் கழிவுநீர் செல்லும் சாக்கடைகளில் போடுவோர்களுக்கு அபராதம் விதிப்பது –மன்றத்தின் அனுமதி பெறுவது- தொடர்பாக. |
| 44 | நிர்வாகம் – கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – பள்ளிகளில் தேசிய பசுமைப் படை – காய்கறித் தோட்டம் அமைத்தல் – மண்புழு உரம் தயார் செய்தல் – திட்டம் செயல்படுத்துதல் – அதற்கான செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட நிர்வாக அனுமதி மற்றும் மாமன்ற அனுமதி வேண்டுதல் – மன்றத்தின் அனுமதி பெறுவது- தொடர்பாக. |
| 45 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் -2014-2017 மூன்றாண்டுகளுக்குகான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2014-2015-ஆண்டிற்கு 5 சதவீதம் உயர்வு செய்து புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மன்றத்தின் அனுமதி பெறுவது- தொடர்பாக. |
| 46 | வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.-73-ல் அரசு மருத்துவமனை எதிரில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்ததை 2013-2016-ம் ஆண்டிற்கான பொது ஏலத்தில் சேர்ப்பது - தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

**(குறள் - 111)**

**விளக்கம்**

காண்பவை, கேட்பவை எல்லாவற்றையும் பகுத்தறிவால் ஆராய்ந்து நல்லவற்றைத் தேர்ந்து. சமுதாயத்தில் மக்களின் தேவை அறிந்து ஒழுகுதல் நடுவுநிலைமை எனப்படும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம் எண் 1

“ மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தென்னிந்தியாவின் மான்செஸ்டராக விளங்கும் நமது கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தாயுள்ளத்தோடு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை வழங்கி செயல்படுத்திட ஆணை பிறப்பித்துள்ளார்கள். இம்மாநகராட்சியில் வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையையும், போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு போக்குவரத்து நெருக்கடியை தீர்ப்பதற்காக கோயம்புத்தூர் மாநகரத்திற்கு “**மோனோ இரயில்**” திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று தமிழக அரசை கோரும் தீர்மானத்தை இம்மாமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக நிறைவேற்றியதன் அடிப்படையிலும், அண்மையில் நடந்து முடிந்த மாவட்ட ஆட்சியருடைய மாநாட்டில் நமது கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலும் மனித நேயமிக்க தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோயம்புத்தூர் மாநகரத்திற்கு “மோனோ இரயில்” திட்டத்தை செயல்படுத்தவும், ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கும், ஆய்வு மேற்கொள்வதற்கும், பணிகள் செய்வதற்கும் உத்திரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு இந்த மாமன்றம் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கி கொள்கிறது” என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 30.12.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

---

## <u>சிறப்புத் தீர்மானம் -2.</u>

“ கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டல எல்லையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை புரிகின்றனர். வயோதிகர்கள் படிக்கட்டுகளின் மூலமாக மலை மீது அமைந்துள்ள கோவிலுக்கு செல்வதில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். எனவே அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு **<u>“ரோப்கார்”</u>** வசதி செய்து தர வேண்டும் என்று தமிழக அரசிற்கு கோரிக்கை விடுக்க வேண்டும் ” என்ற சிறப்பு தீர்மானம் மேற்கு மண்டல தலைவர் திருமதி பி. சாவித்திரி அவர்களால் கொண்டு வரப்பட்டு 20-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி ஜி. ஜெயந்தி அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 30.12.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

---

## பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள **1893**ஆம் ஆண்டு கட்டப்பட்ட விக்டோரியா அரங்கம் தற்சமயம் மாமன்றக் கூட்ட அரங்கமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு 100 வார்டுகளைக் கொண்டுள்ளது. மாமன்றக் கூட்டம் நடைபெறும்பொழுது அதில் கலந்துகொள்ளும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அமர்வதற்கு போதுமான இடவசதி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே புதிய மாமன்ற கூட்ட அரங்கம் கட்டுவதற்கு 2012–13ஆம் ஆண்டு மாநகராட்சி வரவு–செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்திலேயே மாற்று இடத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய மாமன்ற கூட்ட அரங்கம் சுமார் ரூ.9.70 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டுவதற்கு அரசிடம் நிர்வாக அனுமதி கோருவதற்கு 24.07.2013 ஆம் தேதிய மாமன்ற தீர்மான எண்.**103** ன் படி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது **.**

தி/ள் எஸ்.பி.எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தினரால் மாமன்ற அரங்கம் கட்ட மதிப்பீடு ரூ.12.**65** கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே பிரதான அலுவலக வளாகத்திலேயே புதிய மாமன்ற கூட்ட அரங்கம் ரூ.12.65 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டுவதற்கு அதற்கான கட்டிட வரைபடம் அனுமதி நகரமைப்பு துறையில் பெறுவதற்கும் அரசிடம் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதியும் கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6696/2013/எம்.டி.4

## மாநகர மன்ற தீர்மானம் எண் 296 நாள் 30.12.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.10.2013 பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 3523/ 2013/ எம் டி 5 | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி விளையாட்டு மைதானங்களை புதுப்பித்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்களை கொள்முதல் செய்தல் | 60.00 | 3.10.2013 முதல் அழைப்பு | 1) தி/ வா. எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 5.00 % குறைவு<br>2) திருமதி. சி. பாப்பாத்தி 7.07 % குறைவு<br>3) தி/ வா.ராஜீ இன்ஜினியரிங் இண்டஸ்டிரிஸ் 4.87 % அதிகம்<br>4)) தி/ வா. கே.சி.பி இன்ஜினியர்ஸ் 1.45 % குறைவு | திருமதி. சி. பாப்பாத்தி 7.07 % குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண். 3523/2013/எம் டி5

### மாநகர மன்ற தீர்மானம் எண் 297 நாள் 30.12.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

பொருள்:- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுசுகாதார ஆய்வுக்கூடம் -மண்டலத்திற்கு ஒன்று வீதம் தொடங்குதல் - செலவினங்கள் - தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி பொது மக்களுக்கு உதவுவதற்காகவும், அவர்களின் பொருளாதார சுமையைக் குறைக்கும் வகையிலும், அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே இலவச பரிசோதனை மையம் அமையவும் மற்றும் பயன்பெறவும் மாநகராட்சியில் மண்டலம் ஒன்றிற்கு ஒன்று வீதம் 5 பொது சுகாதார ஆய்வுக்கூடங்கள் அமைத்திடவும் மற்றும் இதற்கான பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை Out – source மூலமாக தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளவும் சுகாதார நிலைக்குழு தீர்மான எண் 27 நாள் 10.10.2013 மற்றும் மாமன்ற தீர்மான எண் 214 நாள் 25.10.2013–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன்படி ஆய்வுக்கூடங்களில் பணிபுரியத்தேவையான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கட்டிட வசதி , உபகரணங்கள் மற்றும் தொடர் செலவினங்கள் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளன.

ஐந்து ஆய்வுக்கூடங்களில் பணிபுரியத்தேவையான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1 | Medical Officer Qualification M.B.B.S D.C.P | 1 |
| 2. | Medical Laboratory Technician | 5 |
| 3. | Medical Laboratory Assistant | 5 |
| 4. | Sweeper cum Sanitary Worker | 5 |

1. ஆய்வுக்கூட மருத்துவ அலுவலர் பணியிடம் 01.12.2013 தேதி முதல் காலியாக உள்ளது. எனவே மேற்படி மருத்துவ அலுவலரை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெற்று பணியமர்த்தம் செய்யலாம்.

2. நகர்நல மையத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை இம்மையத்திலும் பணிபுரியச் செய்யலாம். மற்றும் தொழில் நுட்பப்பணியாளர்களை Outsource செய்து பணியமர்த்தலாம்.

ஆய்வுக் கூடத்திற்கென தனியாக கீழ்க்கண்டபடி கட்டிட வசதிகளை பொறியாளர் பிரிவு மூலம் கட்டித்தரலாம். (Each Laboratory requires FIVE rooms)

| | | |
|---|---|---|
| 1 | A Spacious central area of ( 20 feetx20feet) ( waiting place for patients) | 1 |
| 2 | Working place 12x12 feet | 1 |
| 3 | Reaqents storage room 8x8feet | 1 |
| 4 | Medical officers room 10x10feet (with toilet) | 1 |
| 5 | Washing room with toilet (12x12 feet) | 1 |

ஒரு ஆய்வகத்திற்கு ஒருமுறை வாங்கப்படும் பொருட்களின் செலவினம் ரூ. 12,25,321/-ஆகும். ஐந்து ஆய்வகங்களுக்கு மொத்தம் ரூ. 61,26,605/- செலவினம் ஆகும்.

ஒரு ஆய்வகத்திற்கு ஒரு ஆண்டிற்கான தொடர் செலவினம் ரூ. 1,08,978/- ஆகும். ஒரு மாத செலவினம் 9,082/- ஆகும். இதன்படி ஐந்து ஆய்வகங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் தொடர் செலவினம் ரூ. 45,408/- ஆகும்.

எனவே மாநகராட்சியில் ஐந்து மண்டலங்களிலும் ஐந்து ஆய்வகங்கள் அமைப்பது, அலுவலர் மற்றும் பணியாளர்களை பணிக்கு அமர்த்துவது மற்றும் அதற்கான செலவினத்திற்கும், ஆய்வகங்களுக்குத் தேவையான மருந்துப்பொருட்கள், தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்குவது குறித்தும், மேற்படி செலவினத்திற்கும் சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண் 36 நாள் 16.12.2013-ன் படி ஒப்புதல் அளித்துள்ளதைத்தொடர்ந்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 8016/2013/எம்.இ.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 298 நாள் 30.12.2013**

சுகாதாரக்குழு தீர்மானம் எண் 36 நாள் 16.12.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

| | |
|---|---|
| பொருள் | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு பிரிவு–வரைவு அலுவலர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களை மாநகராட்சி பணிக்கு ஈர்த்துக் கொள்ள – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல்– தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம்–II , திடக்கழிவு மேலாண்மைதிட்டம், ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம், நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால் திட்டம் ஆகிய திட்டங்களை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்ட பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாணை எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள். 26.06.2007–ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் மேற்கண்ட திட்டங்களை மேற்கொள்ள இம்மாநகராட்சிக்கு கீழ்கண்ட பணியிடங்கள் ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கண்காணிப்பு பொறியாளர் | 1 |
| 2 | செயற் பொறியாளர் | 2 |
| 3 | உதவி செயற் பொறியாளர் | 4 |
| 4 | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 8 |
| 5 | வரைவு அலுவலர் | 4 |
| 6 | தொழில்நுட்ப உதவியாளர் | 16 |
| 7 | கணக்கு அலுவலர் | 1 |
| 8 | கண்காணிப்பாளர் | 2 |
| 9 | உதவியாளர் | 4 |
| 10 | இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் | 2 |
| 11 | புள்ளி விபர குறிப்பாளர் (கணினி) | 2 |
| 12 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 13 | நகர திட்ட அலுவலர் | 1 |
| 14 | மண்டல திட்ட அலுவலர் | 4 |
| | **மொத்தம்** | **52** |

இதில் வரைவு அலுவலர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 2 பணியிடங்களும் , தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 16 பணியிடங்களில் 11 பணியிடங்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெயர்பட்டியல் பெறப்பட்டு நேரடி நியமனம் மூலம் முற்றிலும் தற்காலிக பணியாளர்களாக கீழ்கண்ட நபர்களை பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | JNNURM பிரிவில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு. சி.எஸ். ராஜேஸ் வேணுகோபால், வரைவு அலுவலர் | 25.01.2008 |
| 2 | எஸ். ஜீவராஜ், வரைவு அலுவலர். | 25.01.2008 |
| 3 | ஏ. வெங்கடாசலம், தொழில்நுட்ப உதவியாளர் | 05.03.2008 |
| 4 | ஆர். தீபா, தொழில்நுட்ப உதவியாளர். | 05.03.2008 |
| 5 | எல். ஜெயராஜ், தொழில்நுட்ப உதவியாளர். | 05.03.2008 |
| 6 | கே. பரமேஸ்வரன், தொழில்நுட்ப உதவியாளர். | 05.03.2008 |
| 7 | கே. மரகதம், தொழில்நுட்ப உதவியாளர். | 05.03.2008 |
| 8 | ஏ. ரேணுகா தேவி, தொழில்நுட்ப உதவியாளர் | 28.02.2011 |
| 9 | ஜி. ரேவதி, தொழில் நுட்ப உதவியாளர் | 28.02.2011 |
| 10 | சி. நாகராஜன், தொழில்நுட்ப உதவியாளர் | 28.02.2011 |
| 11 | எஸ். வெற்றிவடிவேல், தொழில்நுட்ப உதவியாளர் | 28.02.2011 |
| 12 | பி. ராஜ்பாபு, தொழில்நுட்ப உதவியாளர் | 28.02.2011 |
| 13 | ஏ. ஏஞ்சலினா, தொழில் நுட்ப உதவியாளர். | 28.02.2011 |

மேற்படி பணியாளர்கள் தங்களது விண்ணப்பத்தில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு பிரிவில் 2 முதல் 5 வருட காலத்திற்கு மேலாக பணிபுரிந்து வருவதாகவும் இதுநாள் வரை பணிவரன்முறை செய்யப்படவில்லை என்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டதால் பதிவு மூப்பு பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர். கோயம்புத்தூர் மாநகராட்சி 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் காலியாக உள்ள பணியிடங்களில் தொழில் நுட்ப உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து தருமாறும் கோரியுள்ளனர்.

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு இம்மாநகராட்சிக்கு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உதவி/இளம் பொறியாளர் நிலையில் 11 பணியிடங்களும், தொழில் நுட்ப உதவியாளர் நிலையில் 46 பணியிடங்களும் தோற்றுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டப் பணிகள் முடிவுற்றவுடன் இப்பிரிவில் பணிபுரிந்து வரும் மேற்காண் பட்டியலில் கண்டுள்ள 13 பணியாளர்களை கீழ்கண்டவாறு பணிஈர்ப்பு செய்யலாம்.

வரிசை எண். 1 மற்றும் 2ல் உள்ள பணியாளர்களின் ஊதிய விகிதம் ஐந்தாவது ஊதிய குழு பரிந்துரையின்படி இம்மாநகராட்சியில் பணிபுரியும் இளம் பொறியாளர் பதவிக்கான ஊதிய விகிதத்துடன் சமமாக இருப்பதால் இம்மாநகராட்சிக்கு அரசால் அனுமதிக்கப்படும் 11 உதவி/இளம் பொறியாளர் பணியிடங்களில் மேற்காண் வரிசை எண். 1 மற்றும் 2ல் உள்ள பணியாளர்களை அவர்கள் பெற்றுவரும் ஊதியத்தின் பாதுகாப்போடு இம்மாநகராட்சி உதவி/இளம் பொறியாளர் பணிமூப்பு பட்டியலில் இளையோராக ஈர்த்துக் கொள்ளலாம்.

வரிசை எண். 3 முதல் 13 முடிய உள்ள பணியாளர்களின் ஊதிய விகிதம் இம்மாநகராட்சியில் பணிபுரியும் தொழில் நுட்ப உதவியாளர் பதவிக்கான ஊதிய விகிதத்துடன் சமமாக இருப்பதால் இம்மாநகராட்சிக்கு அரசால் அனுமதிக்கப்படும் 46 தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களில் வரிசை எண். 3 முதல் 13 வரை உள்ள பணியாளர்களை இம்மாநகராட்சி தொழில்நுட்ப உதவியாளர் பணிமூப்பு பட்டியலில் இளையோராக ஈர்த்துக் கொள்ளலாம்.

எனவே அரசால் உதவி / இளம் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்கள் ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்படின் நியமனம் செய்யலாம் என்ற நிபந்தனையுடன், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலம் அரசிற்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : அனுமதிக்கலாம். ந.க.எண். 11360/2013/எம்சி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 299 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர், சேலம் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் வேண்டல் – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

-----

திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர், சேலம் மாநகராட்சி, தனது 17.06.2013ம் தேதிய விண்ணப்பத்தில் இம் மாநகராட்சியில் தான் உதவிப் பொறியாளராக 14.04.1997 முதல் பணிபுரிந்து வந்ததாகவும், அரசாணை (ப) எண்.443, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 11.11.2005ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியிலிருந்து சேலம் மாநகராட்சிக்கு மாறுதல் செய்யப்பட்டு 12.12.2005 முதல் சேலம் மாநகராட்சியில் பணிபுரிந்து வருவதாகவும், தனது உடல்நிலையை கருதியும், குழந்தைகளின் கல்வியை கருத்தில் கொண்டும் மீள கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாறுதல் வேண்டி சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பித்ததாகவும், மேற்படி தமது மனுவினை சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.சி3/12477/2012, நாள்.09.05.2012–ஐ உடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், தமது குழந்தைகளின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டும், தமது மருத்துவ சிகிச்சை நல்ல முறையில் பெற்றிட ஏதுவாகவும், சேலம் மாநகராட்சி ஆணையாளரால் பரிந்துரை செய்யப்பட்டதை ஏற்று தமது மாறுதல் கோரும் மனு மீது உரிய உத்திரவு வழங்குமாறு தமது விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர் அவர்கள், இம்மாநகராட்சியில் 25.11.1989 அன்று நகரமைப்பு ஆய்வாளராக (Town Planning Inspector) நிரந்தரப் பணியிடத்தில் பணியில் சேர்ந்துள்ளார். அதனைத் தொடர்ந்து 14.04.1997 முதல் உதவிப் பொறியாளராக பணிமாற்றம் பெற்று பணிபுரிந்து வந்துள்ளார்.

திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரசாணை எண்.443, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.5) துறை, நாள்.11.11.2005–ன்படி, இவர் சேலம் மாநகராட்சிக்கு மாற்றுப்பணி அடிப்படையில் (deputation)பணியில் சேரும் நாள் முதல் ஒரு வருடத்திற்கு மாறுதல் செய்யப்பட்டதன் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண் .6738/2005/எம்சி1, நாள்.07.12.2005–ன்படி, இம்மாநகராட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டு, சேலம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். சி3/11084/2003, நாள். 12.12.2005 முற்பகல் முதல் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். அரசாணை (ப) எண்.217, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.5) துறை, நாள். 03.05.2010–ன்படி சேலம் மாநகராட்சியிலேயே தொடர்ந்து உதவிப் பொறியாளராகப் பணிபுரிந்து வருகிறார். தற்போது இவர் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மீண்டும் ஒரு வழி மாறுதல் கேட்டுள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி, இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே 36 உதவிப் பொறியாளர்/இளம் பொறியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் 72 வார்டுகள் 100 வார்டுகளாக அதிகரிக்கப்பட்டதன் காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் 19.06.2013ம் தேதியன்று அரசிற்கு அனுப்பியுள்ள செயற்குறிப்பில் இம்மாநகராட்சிக்கு 11 உதவி / இளம் பொறியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பரிந்துரை செய்துள்ளார். இப்பணியிடங்களை அரசு அனுமதிக்கும் பட்சத்தில், அதில் ஒரு உதவிப் பொறியாளர் பணியிடத்தில் திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர், சேலம் மாநகராட்சி அவர்களை ஒரு வழி மாறுதல் மூலம் இம்மாநகராட்சியில் நியமனம் செய்யவும், பணிமூப்பு பட்டியலில் இளையோராக சேர்க்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப்பின் மேற்படி தீர்மானத்தை சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 5846/2012/எம்சி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 300 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

பொருள்– கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு – நகர்ப்புற பகுதியில் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை இல்லாத நடவடிக்கை – 21 இடங்களில் நம்ம கழிப்பிடங்கள் இயக்கி மற்றும் பராமரித்தல் பணிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி – பொருள் வைத்தல் தொடர்பாக.

பார்வை– மாநகர மன்ற தீர்மான எண் 123 நாள் 24.7.2013.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலப் பகுதியில் நகர்புற திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை இல்லாத நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 21 இடங்களில் நம்ம கழிப்பிடங்கள் புதிய தொழில்நுட்ப முறையில் நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பிடங்களை நிறுவி மற்றும் பராமரிக்கவும் மாநில அரசால் இடைநிரப்பு மற்றும் உட்கட்டமைப்பு நிதியிலிருந்து மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டும், இயக்கி பராமரித்தல் பணிக்கு ஒராண்டுக்கு ரூ.109.98 இலட்சத்திக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் பெறப்பட்டதில் நம்ம கழிப்பிடம் நிறுவவும், ஐந்து ஆண்டுகளுக்கு இயக்கி மற்றும் பராமரிக்கவும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் தெரிவிக்கப்பட்டு, 8.11.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரார் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.36க்குட்பட்ட அவிநாசி சாலை சித்ரா அருகில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 21.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 2. | வார்டு எண்.64க்குட்பட்ட சௌரிபாளையம் கக்கன் நகர் பகுதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 23.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 3. | வார்டு எண்.34க்குட்பட்ட காளபட்டி பிரதான சாலையில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 24.50 | 7.58 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 4. | வார்டு எண்.64க்குட்பட்ட முத்துமேடு பகுதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 5. | வார்டு எண்.33க்குட்பட்ட காட்டூர் காளபட்டி பகுதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | வார்டு எண்.34க்குட்பட்ட நேரு நகர் பேருந்து நிலையத்தில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 24.50 | 7.58 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 7. | வார்டு எண்.64க்குட்பட்ட சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 8. | வார்டு எண்.43க்குட்பட்ட வெள்ளக்கிணறு உருமாண்டம்பாளையம் பகுதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 9. | வார்டு எண்.31க்குட்பட்ட விளாங்குறிச்சி பிரதான சாலையில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 24.50 | 7.58 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 10. | வார்டு எண்.100க்குட்பட்ட பொள்ளாச்சி பிரதான சாலை, ஈச்சனாரி பகுதியில் பெண்கள் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 11.00 | 3.62 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 11. | வார்டு எண்.82க்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்தில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 12. | வார்டு எண்.21க்குட்பட்ட பூசாரிபாளையம் மேற்கு சாலையில் பெண்கள் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 28.00 | 7.58 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 13. | வார்டு எண்.16க்குட்பட்ட வடவள்ளி பேருந்து நிலையத்திற்க்கு அருகில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 24.50 | 7.58 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 14. | வார்டு எண்.20க்குட்பட்ட வீரகேரளம் மனோஜ் நகர் பகுதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 24.50 | 7.58 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 15. | வார்டு எண்.5க்குட்பட்ட கவுண்டம்பாளையம் மயானத்தில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 24.50 | 7.58 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 16. | வார்டு எண்.99க்குட்பட்ட கோணவாய்க்கால்பாளையம் பகுதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 21.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 17. | வார்டு எண்.100க்குட்பட்ட அன்னபுரம் பகுதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 18. | வார்டு எண்.89க்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் NTP வீதியில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 21.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 19. | வார்டு எண்.99க்குட்பட்ட வெள்ளலூர் குப்பை கிடங்கில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 20. | வார்டு எண்.72க்குட்பட்ட வ.உ.சி மைதானத்தில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| 21. | வார்டு எண்.54க்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் கழிப்பறையை நிறுவி பராமரித்தல் | 14.00 | 4.10 | தி/வா.அர்பனே இன்டஸ்ட்ரீஸ் லிட் |
| | மொத்தம் | 398.00 | 109.98 | |

மேலும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில் ஓராண்டு நிறைவடைந்தவுடன் இயக்கி பராமரிக்க ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையுடன் ஐந்து சதவீதம் சேர்த்து வழங்கவும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியலில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவும் இயக்கி பராமரித்தல் மூலம் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.109.98 இலட்சத்திற்க்கு அனுமதியும், ஒவ்வொரு வருடமும் (இரண்டாவது வருடம் முதல் ஐந்தாம் வருடம் வரை) முந்தைய ஆண்டு வழங்கிய தொகையுடன் கூடுதலாக ஐந்து சதவீதம் வழங்கவும் ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றத்தின் முடிவுக்காக ந.க.எண்-5393/2011/MD5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 301 நாள் 30.12.2013**

பொருளில் குறிப்பிட்டுள்ள 21 கழிப்பிடங்களை நிறுவுவதற்கு மட்டும் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்றும் பராமரித்தல் பணியினை மாநகராட்சியே மேற்கொள்ளவும் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 25.10.2013 முதல் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் நகராட்சிகள், வடவள்ளி, வீரகேரளம், துடியலூர், வெள்ளக்கிணறு, சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, காளப்பட்டி ஆகிய பேரூராட்சிகள் மற்றும் விளாங்குறிச்சி ஊராட்சிஆகியவை புதியதாக இணைக்கப்பட்டுள்ளது. புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் மாநகராட்சியுடன் இணைப்பதற்கு முன் குடிநீர் இணைப்பு வழங்க மேற்பார்வைக் கட்டணம் மற்றும் சாலை சீரமைப்புக் கட்டணங்கள் பல்வேறு விதமாக நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதிகளிலிருந்து புதிய குடிநீர் இணைப்புகள் கோரி விண்ணப்பங்கள் வந்தவண்னம் உள்ளது. மேலும் மாநகராட்சியில் இக்கட்டணங்கள் நிர்ணயம் செய்து பல ஆண்டுகளுக்கு மேல் ஆவதாலும், இக்கட்டணங்களை முறைப்படுத்தவும் புதியதாக குடிநீர் இணைப்பு கோரி வரும் விண்ணப்பங்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு குடிநீர் இணைப்புகள் வழங்கவும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பபுகள் கட்டணங்கள் ஒரே மாதிரியாக நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் பெற, ஐந்து மண்டலங்களில் எந்த மண்டல அலுவலகத்திலும் நடப்பாண்டு சொத்து வரி செலுத்திய ரசீது நகலினை இனணத்து உரிய படிவத்தில் மனு செய்யலாம். கணிணியில் பதிவு செய்யப்படும் மனுக்களின் பேரில் குடிநீர் இணைப்பு வழங்க சுழற்சி முறையில் மாநகராட்சியால் குழாய் பொருத்துநர் ஒதுக்கீடு செய்து உரிய காலத்திற்குள் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும் புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்க சீரான மேற்பார்வைக் கட்டணம், சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் குழாய் பொருத்துநர் கட்டணங்கள் 01.01.2014 முதல் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

1.குடிநீர் குழாய் அமைக்க மேற்பார்வைக் கட்டணத்துடன் கூடிய சாலை சீரமைப்புக் கட்டணம்

அ,தார் சாலை

| வ. எண் | 01.01.2014 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் | | | | |
|---|---|---|---|---|---|
| | குழாயின் அளவு | | 20 அடி சாலைக்கு ரூ | 30 அடி சாலைக்கு ரூ | 40 அடி சாலைக்கு ரூ |
| | விட்டம் மி.மீ | நீளம் | | | |
| 1 | 15 மற்றும் 20 | 6 மீட்டர் நீளம் வரை | 4820/– | 6580/– | 8345/– |
| 2 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 5260/– | 7020/– | 8785/– |
| 3 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 6360/– | 8120/– | 9885/– |
| 4 | | 20மீட்டருக்கு மேல் 30 மீட்டர் நீளம் வரை | 7460/– | 9220/– | 10985/– |
| 5 | 25 | 6 மீட்டர் நீளம் வரை | 4880/– | 6640/– | 8405/– |
| 6 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 5360/– | 7120/– | 8885/– |
| 7 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 6560/– | 8320/– | 10085/– |
| 8 | | 20மீட்டருக்கு மேல் 30 மீட்டர் நீளம் வரை | 7760/– | 9520/– | 11285/– |
| 9 | 32 | 6 மீட்டர் நீளம் வரை | 5165/– | 6925/– | 8690/– |
| 10 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 5825/– | 7585/– | 9350/– |
| 11 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 7475/– | 9235/– | 11000/– |
| 12 | | 20மீட்டருக்கு மேல் 30 மீட்டர் நீளம் வரை | 9125/– | 10885/– | 12650/– |
| 13 | 40 | 6 மீட்டர் நீளம் வரை | 4845/– | 6985/– | 8085/– |
| 14 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 5545/– | 7685/– | 8785/– |
| 15 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 7295/– | 9435/– | 10535/– |
| 16 | | 20மீட்டருக்கு மேல் 30 மீட்டர் நீளம் வரை | 9045/– | 11185/– | 12285/– |

ஆ.சிமெண்ட் கான்கிரீட் சாலை

| வ.எண் | 01.01.2014 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் | | | |
|---|---|---|---|---|
| | குழாயின் அளவு | | 20 அடி சாலைக்கு ரூ | 30 அடி சாலைக்கு ரூ |
| | விட்டம் மி.மீ | நீளம் | | |
| 1 | 15 மற்றும் 20 | 6 மீட்டர் நீளம் வரை | 2406/– | 3148/– |
| 2 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 2846/– | 3588/– |
| 3 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 3946/– | 4688/– |
| 4 | 25 | 6 மீட்டர் நீளம் வரை | 2466/– | 3208/– |
| 5 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 2946/– | 3688/– |
| 6 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 4146/– | 4888/– |

இ.மண் சாலை

| வ.எண் | 01.01.2014 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் | | |
|---|---|---|---|
| | குழாயின் அளவு | | 20 அடி சாலைக்கு ரூ |
| | விட்டம் மி.மீ | நீளம் | |
| 1 | 15 மற்றும் 20 | 6 மீட்டர் நீளம் வரை | 910/– |
| 2 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 1350/– |
| 3 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 2450/– |
| 4 | | 20மீட்டருக்கு மேல் 30 மீட்டர் நீளம் வரை | 3550/– |
| 5 | 25 | 6 மீட்டர் நீளம் வரை | 970/– |
| 6 | | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 1450/– |
| 7 | | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 2650/– |
| 8 | | 20மீட்டருக்கு மேல் 30 மீட்டர் நீளம் வரை | 3850/– |

**2.குழாய் பொருத்துநர் கட்டணம்**

குழாய் பொருத்துநர் கட்டணம் (கூலி ஆட்கள், கொத்தனார் உட்பட)

| வ.எண் | இணைப்பு அமைத்திடும் நீளம் | மொத்தம் ரூ |
|---|---|---|
| 1 | 6 மீட்டர் நீளம் வரை | 2000/– |
| 2 | 6மீட்டருக்கு மேல் 10 மீட்டர் நீளம் வரை | 2800/– |
| 3 | 10மீட்டருக்கு மேல் 20 மீட்டர் நீளம் வரை | 3600/– |
| 4 | 20மீட்டருக்கு மேல் 30 மீட்டர் நீளம் வரை | 4400/– |
| 5 | 30மீட்டருக்கு மேல் 40 மீட்டர் நீளம் வரை | 5200/– |

குடிநீர் குழாய் இணைப்பு பெற காப்புத் தொகை மற்றும் பிற கட்டணங்களுடன் மேற்கண்ட திருத்திய மேற்பார்வைக் கட்டணத்துடன் கூடிய சாலை சீரமைப்பு கட்டணத்தை சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகத்தில் செலுத்தி பணி உத்திரவு பெற்றுக் கொள்ளவும், குழாய் பொருத்துநர் கட்டணத்தை சம்மந்தப்பட்ட குழாய் பொருத்துநருக்கு விண்ணப்பதாரரால் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு 1.1.2014 முதல் அமுல்படுத்த அனுமதிக்கலாம். ந.க.எண்.8868 /2013/ எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 302 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

பொருள் : பொறியியில் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 75-க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் எரிவாயு தகன மேடை - ஈஷா பவுண்டேசன் அறக்கட்டளை - பராமரிப்பு காலம் நீட்டிப்பு செய்வது – தொடர்பாக.

பார்வை : 1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை)எண் 228, நாள் 13.11.2008.

2.மாமன்ற தீர்மானம் எண் 207, நாள் 05.01.2013.

3. நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 3441/2011/தி2, நாள் 12.05.2011.

4. ஈஷா பவுண்டேசன் தனியார் நிறுவனம் கடிதம் நாள் 25.11.2013.

5. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 15.12.2013.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 75-க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் சாலையில் உள்ள மாநகராட்சி எரிவாயு தகன மேடையை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்க பார்வை (1)-ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பார்வை (2)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் ஈஷா பவுண்டேசன் தனியார் அறக்கட்டளைக்கு பார்வை (3)-ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதத்தில் அனுமதி பெற்று மூன்று வருடங்களுக்கு பராமரிக்க ஒப்படைக்கப்பட்டது.

பார்வை (4)-ல் காணும் ஈஷா பவுண்டேசன் தனியார் அறக்கட்டளை நிறுவனத்திற்கு பிப்ரவரி 2011 அன்று பராமரிப்பு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டது. பராமரிப்பு காலம் பிப்ரவரி 2014 உடன் முடிவடைவதால் பராமரிப்புக் காலத்தை மூன்று வருடங்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் : 4155/2009/கிடி2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 303 நாள் 30.12.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள்: பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் திரு.எஸ்.மணி துப்புரவு பணியாளர் வீடு கட்டிக் கொள்ள முன் பணம் அனுமதித்தல் தொடர்பாக.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் வார்டு எண். 11-ல் துப்புரவு பணியாளராக பணியாற்றும் திரு. எஸ். மணி என்பவர் கோவை வட்டம் பெரியநாயகன்பாளையம் நெ. 2 கூடலூர் பேரூராட்சி க.ச.எண். 125/1 தாமு நகர் மனை எண். 9-ல் பத்திர எண். 14633-ன் படி அவருக்கு பாத்தியப்பட்ட கிழபுற பகுதி 900 சதுரடி காலிமனை இடத்தில் மாநகராட்சி நிதியிலிருந்து வீடு கட்டும் முன்பணம் பெற்று வீடு கட்டிக் கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி காலிமனையில் திரு. எஸ்.மணி அவரது தகுதிக்கேற்ப ரூ.6,50,000/- ஐ மாநகராட்சி வீடு கட்டும் முன்பணம் நிதியிலிருந்து பெற்று வீடு கட்டி கொள்ளவும், மேற்படி தொகையை மாநகராட்சி விதிகளின்படியும் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு இருசம தவணைகளில் அவருக்கு வழங்கவும், மேற்படி அசல் தொகையை 140 மாத சம தவணைகளிலும் பின்னர் வட்டி தொகையை 60 மாத சம தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண். 5848/12/இ2 (மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 304 நாள் 30.12.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – பொது உபயோக கட்டிடங்களில் கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்த ஆணையிட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது - அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் பிரசுரிக்கப்பட்டது – அரசாணை மாமன்றத்தின் பதிவிற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள்.14.12.2012.

*******

பார்வையில் காண் அரசாணையில் அனைத்து பொது உபயோக கட்டிடங்களுக்கும் CCTV பொருத்த வேண்டும் என்றும் கட்டிட அனுமதி வழங்கப்பட உள்ள வரைபடத்தில் மேற்படி நிபந்தனைகளை தெரிவிக்க வேண்டும் என்றும் கட்டிட பணி முடிவு பெறும் சமயத்தில் CCTV அமைக்கப்பட்டு உள்ளதை உறுதி செய்ய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டி முடிக்கப்பெற்ற கட்டிடங்களுக்கு 6 மாத காலத்திற்குள் CCTV யை பொருத்த வேண்டுமென்றும் இப்பணி கட்டிட உரிமையாளர் அல்லது வாடகைக்கு பயன்படுத்துவோர் CCTV யை பொருத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வணிக உரிமம் D & O Trade Licence ஆகியவற்றை ரத்து செய்யவும் அல்லது தடை செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு அலுவலக கட்டிடங்களில் 100 நபர்களுக்கு மேல் பணியாற்றும் நிறுவனம் அல்லது கட்டிடத்தின் பரப்பளவு 500 ச.மீட்டருக்கு மேல் இருந்தால் மேற்படி கட்டிடத்தில் CCTV பொருத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி அரசாணை மாமன்றத்தின் பதிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றத்தின் பதிவிற்கு. ந.க.எண்.11826 /2013/ எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 305 நாள் 30.12.2013**

பதிவு செய்யப்பட்டது

---

## பொருள் எண் 11

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - 40 மைக்ரான் தடிமன் அளவுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பைகளை மாநகராட்சிப் பகுதிகளில் உற்பத்தி செய்வோர், மொத்த விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர்களுக்கான அபராதத்தொகை அதிகப்படுத்தி நிர்ணயம் செய்வது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 262, நாள். 21.01.2008ன்படி மாநகராட்சியின் அழகைப் பராமரிக்கவும் மற்றும் சுற்றுப்புறசூழலைக் கருத்தில் கொண்டும் 40 மைக்ரான் தடிமனான அளவுக்கு குறைவாக ஒரு முறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களான, கேரிபேக், பிளாஸ்டிக் முலாம் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டிக் கப்புகள், டம்ளர்கள், மேசை விரிப்புகள் மற்றும் உணவகங்களில் பயன்படுத்தப்படும் உணவுத் தட்டுகளில் ஒருமுறையே உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் சீட்டுகள் ஆகியவற்றை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டு இது தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட அரசிதழில் 24.03.2008 அன்று வெளியிடப்பட்டு அனைவரும் தெரிந்துக்கொள்ளும் வகையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மேற்படி தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வியாபார ஸ்தலங்கள் ஆகியவற்றை மாநகராட்சி அதிகாரிகள் கொண்ட குழு அவ்வப்பொழுது ஆய்வுகள் மேற்கொண்டு மேற்படி தடையினை மீறி செயல்பட்டோர் மீது அபராதம் விதித்து பிளாஸ்டிக் பொருட்களையும் பறிமுதல் செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

எனினும் மாநகராட்சிப் பகுதிகளில் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு அதிகரித்து, கழிவுநீர் செல்லும் சாக்கடைப் பகுதிகளில் அடிக்கடி அடைப்புகள் ஏற்பட்டு கழிவுநீர் தேக்கமடைவதால் கொசுக்கள் உற்பத்தியாகவும் மற்றும் சுற்றுப்புற சுகாதாரப் பாதிப்பு ஏற்படுவதற்கும் வழிவகை செய்கிறது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2011-ன் படியும் மாமன்றத் தீர்மான எண்.148. நாள். 29.08.2013ன்படி 40 மைக்ரான் தடிமன் அளவுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை மற்றும் உபயோப்படுத்துதல் போன்றவற்றிற்கு தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றி இதனை மீறி செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு 40 மைக்ரான் தடிமன் அளவுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பொருட்களை மாநகராட்சி அதிகாரிகள் குழு ஆய்வு மேற்கொண்டு பறிமுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொது சுகாதாரத்தைப் பேணி பாதுகாக்கவும் சுற்றுச்சூழல் பராமரிப்பை மேம்படுத்தும் வகையிலும் ஏற்கனவே, மாநகராட்சி மூலம் விதிக்கப்பட்ட அபராதத் தொகையை கீழ்க்கண்டபடி அதிகப்படுத்தி நிர்ணயம் செய்யவும் மேற்படி 40 மைக்ரான் தடிமன் அளவுக்கு குறைவான பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

அபராதக் கட்டணம்

| வ. எண். | பழைய அபராதத் தொகை | ரூபாய் | நிர்ணயம் செய்ய வேண்டிய புதிய அபராதத் தொகை | ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தியாளர்களுக்கு அபராதம் | 5000/- | உற்பத்தியாளர்களுக்கு அபராதம் | 1,00,000/- |
| 2 | மொத்த விற்பனையாளர்களுக்கு அபராதம் | 2500/- | மொத்த விற்பனையாளர்களுக்கு அபராதம் | 50,000/- |
| 3 | சில்லரை விற்பனையாளர்களுக்கு அபராதம் | 750/- | சில்லரை விற்பனையாளர்களுக்கு அபராதம் | 10,000/- |
| 4 | உணவக உரிமையாளர்களுக்கு அபராதம் | | உணவக உரிமையாளர்களுக்கு<br>i) 500 ச.அடிக்கு கீழ்<br>ii) 500 to 2000 ச.அடி வரை<br>iii) 2000 ச.அடிக்கு மேல் | <br>1,000/-<br>2,500/-<br>5,000/- |
| 5 | உபயோகிப்பாளர்களுக்கு அபராதம் | 100/- | உபயோகிப்பாளர்களுக்கு அபராதம் | 200/- |

மேலும், 1 முதல் 5 வரை உள்ள அனைத்து இனங்களுக்கும் 2வது முறை இரு மடங்கு அபராதம் நிர்ணயிக்கலாம். வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வியாபார ஸ்தலங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் 40 மைக்ரான் தடிமன் அளவுக்கு மேல் உள்ள பிளாஸ்டிக் பைகளை அவற்றின் அளவிற்கேற்றபடி விலை நிர்ணயம் செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய அனுமதிக்கலாம் .

| Sl. No | Size in Inch | Weight / Pkt | Pcs / Pkt | Rate / Pkt | Per piece in rate Rs. P. |
|---|---|---|---|---|---|
| 1 | 10 x 13 | 130 GMS | 25 Pcs | Rs.14.00 | 05.00 |
| 2 | 13 x 16 | 250 GMS | 25 Pcs | Rs.24.50 | 10.00 |
| 3 | 16 x 20 | 335 GMS | 25 Pcs | Rs.36.50 | 20.00 |
| 4 | 17 x 23 | 410 GMS | 25 Pcs | Rs.47.00 | 30.00 |
| 5 | 20 x 26 | 540 GMS | 25 Pcs | Rs.60.00 | 40.00 |
| 6 | 24 x 30 | 750 GMS | 25 Pcs | Rs.81.00 | 50.00 |

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி புதிய அபராதக் கட்டணம் மற்றும் 40 மைக்ரான் தடிமன் அளவுக்கு மேல் உள்ள பிளாஸ்டிக் பைகளை அவற்றின் அளவிற்கேற்றபடி விலை நிர்ணயம் செய்து பொது மக்களுக்கு விநியோகம் செய்யவும், சுகாதார நிலைக்குழு தனது தீர்மானம் எண். 35 நாள். 16.12.2013-ல் ஒப்புதல் வழங்கியுள்ளதின் பேரில், மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். எண்.13664/2006/எம்.இ .8

## மாநகர மன்ற தீர்மானம் எண் 306 நாள் 30.12.2013

சுகாதாரக்குழு தீர்மானம் எண் 35 நாள் 16.12.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் :- பொது சுகாதாரப் பிரிவு - நகர் நல மையங்கள் - செவிலியர் பள்ளி மாணவிகள் பயிற்சி பெற அனுமதி அளித்தல் - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 20 நகர் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றது. கோயம்புத்தூர் பகுதிகளில் இயங்கும் தமிழ்நாடு நர்சிங் அண்ட் மிட் வைவ்ஸ் கவுன்சில் சென்னை அவர்களிடம் அங்கீகாரம் பெற்ற செவிலியர் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு இம்மையங்களில் பயிற்சி பெற அனுமதி கட்டணம் ரூ.5,000ம் மற்றும் ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.5 வீதம் பெறப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தாண்டு ரூ.10 வீதம் பெற சுகாதார நிலைக்குழு தனது தீர்மானம் எண். 38 நாள். 16.12.2013-ல் அனுமதி அளித்ததின் பேரில் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் :- 3113/ 2013/ எம்.இ.2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 307 நாள் 30.12.2013

சுகாதாரக்குழு தீர்மானம் எண் 38 நாள் 16.12.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி "பண்ணை பசுமை காய்கறித் திட்டம் கடை- மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு சிவானந்தா காலனி வணிக வளாகத்தில் கடை எண்.5-க்கு மாதவாடகை ரூ.2500/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. கூடுதலாக ஒரு கடையினை ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண்.263 நாள்.25.10.2013.
2. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி நாள்.22.10.2013 மூலம் பெறப்பட்ட சங்கனூர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகம் லிட் சி.சி.2220 நாள்.22.10.2013.
3. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.158 நாள்.17.12.2013.

----------

பார்வை 1-ல் காணும் மாமன்றத் தீர்மானத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு சிவானந்தா காலனி பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் "பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை செயல்படுத்த பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்கு (Farm Fresh Consumer Outlets)" 10 x 16 சதுரடி அளவுள்ள கடை எண்.5 மாத வாடகை ரூ.2500/- நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.263 நாள்.25.10.2013-ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை எண்.4 என மாறுதல் செய்து வழங்க ஒப்புதல் வேண்டப்படுகிறது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி தற்போது கூடுதலாக ஒருகடையினை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளனர். இதன்படி தரைதளத்தில் உள்ள கடை எண்.3-யினை 160 சதுரடி (16 x10) அளவுள்ள கடைக்கு பொது பணித்துறை வாடகை மதிப்பீட்டின் படி மாதாந்திர வாடகை ரூ.4610/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வளாகத்தில் தரை தளத்தில் காலியாக உள்ள கடை எண்.3யினை கூடுதலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் "பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை செயல்படுத்த பண்ணை பசுமை நுகர்வோர் கடைக்கு (Farm Fresh Consumer Outlets)" ஒதுக்கீடு செய்து ரூ.4610/-னை வாடகையாக நிர்ணயம் செய்வது குறித்து முடிவு செய்ய வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.158 நாள்.17.12.2013-ன் படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4363/13/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 308 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 158 நாள் 17.12.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.68 மத்திய மண்டலத்திற்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.1 மற்றும் 2 உரிமம் ரத்து செய்து மறு ஏலம் கோர அனுமதி கோருவது தொடர்பாக.

பார்வை-
1. துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள் 19.09.2013
2. மாமன்ற தீர்மான எண்.76 நாள்.12.09.2011
3. மாமன்ற தீர்மான எண்.247 நாள்.25.10.2013
4. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.142 நாள்.17.12.2013.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.68-ல் அமைந்துள்ள நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.1 மாதாந்திர உரிம கட்டணம் ரூ.8,000/- மற்றும் கடை எண்.2 மாதாந்திர உரிம கட்டணம் ரூ.7600/- என்ற அடிப்படையில் திரு.பி.கார்த்திகேயன் என்பவருக்கு மாமன்ற தீர்மான எண்.76 நாள் 12.09.2011-ல் மூன்றாண்டுகளுக்கு 01.01.2012 முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. குத்தகை விதிகளின்படி உரிமைதாரரிடமிருந்து மேற்படி கடைகளுக்கான வைப்புத்தொகை கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வசூல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கடை எண்.1 – செலுத்திய தொகை | |
| வைப்புத்தொகை | -ரூ. 25,000/- |
| ஓராண்டுக்கான உரிமக் கட்டணம் முன் வைப்புத்தொகை (ரூ.8000/- x 12) | -ரூ. 96,000/- |
| சேவை வரி 10.30 சதவீதம் | -ரூ. 9,888/- |
| | -ரூ.1,30,888/- |
| கடை எண்.2 – செலுத்திய தொகை | |
| வைப்புத்தொகை | -ரூ. 25,000/- |

| | |
|---|---|
| ஓராண்டுக்கான உரிமக் கட்டணம் முன் வைப்புத்தொகை (ரூ.7600/- x 12) | -ரூ. 91,200/- |
| சேவை வரி 10.30 சதவீதம் | -ரூ. 9,396/- |
| | ------------------- |
| | -ரூ.1,25,596/- |
| | ========== |

<u>கடை எண்.1 - செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை ஜனவரி 2013 முதல் செப்டம்பர் 2013 வரை.</u>

| | |
|---|---|
| வாடகைத்தொகை | -ரூ.1,68,001/- |
| அபராத தொகை வட்டி | -ரூ. 25,475/- |
| சேவை வரி | -ரூ. 5,933/- |
| | ------------------- |
| | -ரூ.1,99,409/- |
| | ========== |

<u>கடை எண்.2 - செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை ஜனவரி 2013 முதல் செப்டம்பர் 2013 வரை.</u>

| | |
|---|---|
| வாடகைத்தொகை | -ரூ.1,59,598/- |
| அபராத தொகை வட்டி | -ரூ. 24,201/- |
| சேவை வரி | -ரூ. 5,636/- |
| | ------------------- |
| | -ரூ.1,89,435/- |
| | ========== |

உரிம கட்டண நிலுவை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நிலுவைத் தொகை ஏதும் செலுத்தப்படாததால் மாநகராட்சியால் 04.10.2013 அன்று பூட்டப்பட்டது.

எனவே குத்தகைதரா் திரு.பி.கார்த்திகேயன் என்பவருக்கு பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி 01.01.2012 முதல் மூன்றாண்டுகளுக்கான உரிம உத்திரவினை ரத்து செய்யவும் குத்தகைதாரா் செலுத்திய அனைத்துத்தொகைகளையும் பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவுவைக்கவும், குத்தகைதாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கவும் மற்றும் மேற்படி கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய செய்தித்தாளில் விளம்பர செய்தமைக்கு முன்அனுமதி வேண்டியும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.142 நாள்.17.12.2013-ன் படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.3886/11/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 309 நாள் 30.12.2013

1. பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு உரிமம் ரத்து செய்யவும், குத்தகைதாரா் செலுத்தியுள்ள தொகைகளை பறிமுதல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.
2. பிற மண்டலங்களில் செலுத்தப்பட்டுள்ள தொகைகளை இவ்வினத்திற்கு சரிசெய்ய விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரியவருவதால் தற்காலிகமாக கருப்புப் பட்டியலில் பெயர் சேர்ப்பதை ஒத்தி வைக்கவும், ஆவணங்களை சரிபார்த்து பின்னர் பரிசீலனை செய்யலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் விக்டோரியா ஹால் மேற்கில் உள்ள இரண்டு கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை: 1.மாமன்ற தீர்மான எண்.191 நாள்.16.08.2012.
2.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 17.10.2013.
3.வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.156 நாள்.17.12.2013.

**********

பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82 N.H. ரோட்டில் விக்டோரியா ஹால் மேற்கில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு கடைகளை ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு அளவு சதுரடி |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் விக்டோரியா ஹால் மேற்கில் | 1 மற்றும் 2 | 128.04 |

எனவே மேற்படி கடைக்கு பார்வை 1-ல் தீர்மானிக்கப்பட்டதை ரத்து செய்து இவ்விரு கடைகளும் தற்போது வரை காலியாக உள்ளதால் மீண்டும் ஏலஇனத்தில் சேர்த்து மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.156 நாள்.17.12.2013-ன் படி அ) வைப்புத்தொகை ரூ.1,50,000/- ஆ) காப்புத்தொகை ரூ.75,000/- இ) சொத்து மதிப்பீடு சான்றிதழ் ரூ.3,00,000/- ஈ) சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூ.1,50,000/- என நிர்ணயம் செய்து அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 3765/2012/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 310 நாள் 30.12.2013

மாநகராட்சி பிரதான அலுவலகம் விக்டோரியா ஹால் மேற்புறம் இக்கடைகள் அமைந்துள்ளதால் N.H. ரோட்டில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் விதத்தில் உள்ள நடைபாதையினை விரிவுபடுத்த வேண்டியிருப்பதால், இக்கடைகளை பொதுஏலம் விடுவதிலிருந்து நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும் இதே சாலையில் அமைந்துள்ள பிற மாநகராட்சி வணிக வளாக கடைகளையும் காலி செய்ய நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் உள்ள கடையை அன்னூர் சர்வோதய சங்கத்திற்கு கோரியது – மாமன்றத்தில் பரீசிலனையில் உள்ளது – தற்போது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய அனுமதி கோருவது - தொடர்பாக.

பார்வை:
1.மாமன்ற தீர்மான எண்.44 நாள்.30.05.2012.
2.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.24.1.2013. மற்றும் 17.10.2013
3.தலைவர் கோவை மாவட்டக் கூட்டுறவு கருப்பட்டி விற்பனை சம்மேளனம் அவர்களின் 21.07.2013-ம் தேதிய கடிதம்.
4.துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள்.27.08.2013.
5.வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.155 நாள்.17.12.2013.

**********

பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82 N.H. ரோட்டில் உள்ள கடையை அன்னூர் சர்வோதய சங்கம் காதி கிராமோத்யாக் பவன், கோவை கிளைக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து பின்னர் பரிசீலிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பார்வை (3)-ன்படி ஈரோடு திருப்பூர் மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி விற்பனைச் சம்மேளனம் லிட் அவர்கள் 21.07.2013-ல் தங்களது நிறுவனத்திற்கு இக்கடையை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளார். பார்வை (4)-ன்படி உதவி இயக்குநர் (காதி) அவர்களிடமிருந்து சம்மத கடிதம் ஏதும் பெறப்பட்வில்லை. எனவே தற்போது காலியாக உள்ள இக்கடையை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் உள்ள கடை | 1 | 210.00 | 63.00 | 13,230/- |

எனவே மேற்படி கடைக்கு பார்வை 1-ல் தீர்மானிக்கப்பட்டதை ரத்து செய்து மீண்டும் இக்கடையை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.155 நாள்.17.12.2013-ன்படி அ)வைப்புத்தொகை ரூ.3,00,000/- ஆ) காப்புத்தொகை ரூ.1,50,000/- இ) சொத்து மதிப்பீடு சான்றிதழ் ரூ.4,00,000/- ஈ) சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூ.2,00,000/- என நிர்ணயம் செய்து அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 3765/2012/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 311 நாள் 30.12.2013

மாநகராட்சி பிரதான அலுவலகம் விக்டோரியா ஹால் மேற்புறம் இக்கடைகள் அமைந்துள்ளதால் N.H. ரோட்டில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் விதத்தில் உள்ள நடைபாதையினை விரிவுபடுத்த வேண்டியிருப்பதால், இக்கடைகளை பொதுஏலம் விடுவதிலிருந்து நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும் இதே சாலையில் அமைந்துள்ள பிற மாநகராட்சி வணிக வளாக கடைகளையும் காலி செய்ய நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.80-ல் ராஜவீதி காா் பாா்க்கிங்- மாநகராட்சி வணிக வளாக கடைகள் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடா்பாக.

பாா்வை: வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.175 நாள்.17.12.2013

---------

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட எண்.80-ல் ராஜவீதி காா் பாா்க்கிங்- மாநகராட்சி வணிக வளாக கடைகள் - தரைதளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள மூன்று கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிா்ணயம் செய்திட பொறியாளாின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிா்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வாா்டு எண்.80-ல் ராஜவீதி காா்பாா்க்கிங் மாநகராடசி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 1 | 1 | 96.87 | 107/- | 10,365/- |
| 2 | வாா்டு எண்.80-ல் ராஜவீதி காா்பாா்க்கிங் மாநகராடசி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 2 | 1 | 102.00 | 107/- | 10,914/- |
| 3 | வாா்டு எண்.80-ல் ராஜவீதி காா்பாா்க்கிங் மாநகராடசி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 3 | 1 | 147.25 | 107/- | 15,756/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிா்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.175 நாள்.17.12.2013-ன் படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பாிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

வைப்புத்தொகை (கடை எண்.1 முதல் 3 வரை) -ரூ.1,50,000/-

காப்புத்தொகை -ரூ. 75,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது

வங்கி உறுதி சான்றிதழ் -ரூ.3,00,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக
செலுத்த வேண்டிய தொகை -ரூ1,50,000/-

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11577 /2013/அ1(ம)

## மாநகர மன்ற தீா்மானம் எண் 312 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 175 நாள் 17.12.2013ன் பாிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.81-ல் வெரைட்டிஹால் சாலை திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாடு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடையை –கோவைபுதூா் நுகா்வோா் கூட்டுறவு பண்டக சாலை சி.சி.2382-க்கு ஒதுக்கீடு செய்வது - தொடா்பாக.

பாா்வை
1.மாமன்ற தீா்மான எண்.403, நாள்.18.03.2013.
2.மாமன்ற தீா்மான எண்.95 நாள்.24.07.2013
3.செயலாளா் கோவைபுதூா் நுகா்வோா் கூட்டுறவு பண்டக சாலை சி.சி.2382 அவா்களின் கடித நாள்.11.10.2013.
4.ஆணையாளா் உத்திரவு நாள்.20.11.2013.
5.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.154 நாள்.17.12.2013

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.81-ல் வெரைட்டிஹால் சாலை திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடையை பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி மாத வாடகை ரூ7,500/-க்கு தி/ள்.தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தி/ள்.தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மேற்படி கடையை பொறுப்பு ஏற்காததால் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்த உரிமத்தை ரத்து செய்து மீண்டும் பார்வை 2-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி அரசு மதிப்பு ரூ.10,020/- என நிர்ணயம் செய்யப்பட்டு மாதாந்திர வாடகை ஏலத்தில் சேர்க்கப்பட்டது.

மேற்படி கடைக்கு 25.07.2013, 30.08.2013, 24.09.2013 மற்றும் 13.11.2013 ஆகிய தேதிகளில் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்பட்டதில் ஒருவரும் ஏலத்தில் கலந்துக்கொள்ளவில்லை.

பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தி/ள்.கோவைபுதூர் நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை சி.சி.2382 அவர்கள் ரூ.4000/- மாதாந்திர வாடகை எடுத்துக்கொள்வதற்கு சம்மத கடிதம் வழங்கியுள்ளார்,

எனவே மேற்படி தி/ள்.கோவைபுதூர் நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை சி.சி.2382 அவர்களுக்கு ரூ.4000/- மாதாந்திர வாடகைக்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.154 நாள்.17.12.2013-ன் படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீரமானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/2012/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 313 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 154 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட 2013-2016-ம் ஆண்டுக்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைத்தல் - தொடர்பாக

பார்வை: 1.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.103 நாள்.22.10.2013
2.வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.141 நாள்.17.12.2013.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனத்திற்கு 2013-2016 வரையிலான ஆண்டிற்கு 27.12.2012, 23.01.2013, 13.02.2013, 28.02.2013, 13.03.2013, 27.03.2013, 17.04.2013, 15.05.2013, 12.06.2013, 25.07.2013 மற்றும் 30.08.2013 ஆகிய நாட்களில் (11முறை) ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது மின் ஏலம் நடைபெற்றது. மீண்டும் 13.11.2013 அன்று மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது .

| வ. எண் | குத்தகை இனம் | ஏலதாரர் பெயர் | 30.08.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 13.11.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | இராஜ வீதி மருந்தக வளாகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம்.<br>அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.23,27,000/- | திரு.A.சிவக்குமார் | 20,80,899/-<br>(ஒப்பந்தப்புள்ளி) | 22,50,000/-<br>(ஒப்பந்தப்புள்ளி) |

பார்வையில் காணும் வ.வி.ம.நி.கு தீர்மானத்தின்படி இவ்வினத்திற்கு மறுஏலம் கோரப்பட்டதில் 13.11.2013- அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.A.சிவக்குமார் என்பவரிடமிருந்து ரூ,22,50,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அரசு நிர்ணய மதிப்பீடு ரூ23,27,000/- விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு 2012-2013 ஆண்டு ஏலத்தொகையில் 5 சதவீதம் கூடுதல் தொகை நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு ரூ.20,33,600/- ஆகும். இதன் அடிப்படையில் ஏப்ரல் 2013 முதல் நவம்பர் 2013 வரை மாதம் ஒன்றுக்கு ரூ.1,69,467/- வீதம் நீட்டிப்பு செய்து திரு.D.வேலுமணி முந்தைய குத்தகைதாரிடமிருந்து நீட்டிப்பு தொகை பெறப்பட்டுவருகிறது.

தற்போது மேற்படி இனத்திற்கு திரு.A.சிவக்குமார் என்பவரிடமிருந்து ரூ,22,50,000/-க்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று இவ்வினத்தினை ஒப்படை செய்ய அனுமதி வேண்டி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.141 நாள்.17.12.2013-ன் படி 26.11.2012-ம் தேதிய ஆணையாளர் அவர்களின் ஒப்புதலின்படி, வருவாய் இழப்பினனை தவிர்க்கும் பொருட்டு குத்தகைதாரர் திரு.சிவக்குமார் அவர்களிடமிருந்து 01.12.2013 முதல் 31.03.2014 வரையிலான காலத்திற்குண்டான ஏலத்தொகை சேவைவரி வசூலிக்கப்பட்டு உரிமம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 314 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 141 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட 2013-2016-ம் ஆண்டுக்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – ஓப்படைத்தல் - தொடர்பாக .

பார்வை : வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.143 நாள்.17.12.2013.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 2013-2016 வரையிலான ஆண்டிற்கு 27.12.2012, 23.01.2013, 13.02.2013, 28.02.2013, 13.03.2013, 27.03.2013, 17.04.2013, 15.05.2013, 12.06.2013 25.07.2013 மற்றும் 30.08.2013 ஆகிய நாட்களில் (பதினொரு முறை) ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது மின் ஏலம் நடைபெற்றது. மீண்டும் 24.09.2013 அன்று மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ் கண்ட குத்தகை இனத்திற்கு நடைபெற்றது .

| வ. எண் | குத்தகை இனம் | ஏலதாரர் பெயர் | 30.08.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | உக்கடம் புதிய மீன்மார்க்கெட்டில் உள்ள நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலித்தல் மற்றும் இரண்டு சக்கர வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் அரசுநிர்ணய மதிப்பீடு ரூ7,35,000/- | திரு.கலீல் ரஹ்மான்<br>திரு.M.சுலைமான் | 4,00,500/- (ஒப்பந்தப்புள்ளி) | 4,11,000/- (ஒப்பந்தப்புள்ளி) |

இவ்வினத்திற்கு பதினொரு முறை ஏலம் நடைபெற்றது. தற்போது 24.09.2013- அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.M.சுலைமான் அவர்களிடமிருந்து ரூ.4,11,000-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி இனத்திற்கு எப்ரல், மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் துறை மூலம் வசூல் சராசியாக ரூ.10,167/- (10167x12=122004) வசூல் பெறப்பட்டுள்ளது அதற்கு ஒரு பணியாளர் அமர்த்தப்பட்டுள்ளது. அரசுநிர்ணய மதிப்பீடு ரூ7,35,000/-

இவ்வினம் 2012-2013ம் ஆண்டிற்கு புதியதாக ரூ.7,00,000/- திரு.கலீல் ரஹ்மான் குத்தகைதாரருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வினத்தை 2013-2014-ல் நடத்த இயலாத காரணத்தினால் இவ்வினம் மறு ஏலம் கொண்டு வரப்பட்டது.

மாநகராட்சிக்கு ஏற்படும் நிதிஇழப்பினை தவிர்க்கும் பொருட்டு இவ்வினத்தினை திரு.M.சுலைமான் என்பவருக்கு ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.143 நாள்.17.12.2013-ன் படி உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீமானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 315 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 143 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் 2005-06 முதல் 2012-2013 முடிய பல்வகை கேட்பு குத்தகை இனங்களின் காசோலைத் தொகை வரவு வைக்கப்படாதது தொடர்பான சிறப்புத் தணிக்கை அறிக்கை - திரு.M.A.கலீல்ரஹ்மான் குத்தகைதாரரை கருப்புப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் மாநகராட்சி ஏல இனங்களிலிருந்து நீக்கம் செய்தல் - தொடர்பாக.

பார்வை: 1.மத்திய மண்டலம் சிறப்பு தணிக்கை அறிக்கை நாள். 03.04.2013
2.மாமன்ற தீர்மான எண்.351 நாள்.31.01.2013
3.வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.144 நாள்.17.12.2013.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர ஏல இனங்களில் 2012-2013-ம் ஆண்டிற்கு (1) வார்டு எண்.83 இராமர் கோயில் வீதி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் குத்தகை இனத்திற்கு திரு.M.A.கலீல்ரஹ்மான் குத்தகைதாரர் I.D.B.I. காசோலை எண்.00798 நாள்.31.03.2012 மூலம் செலுத்தப்பட்ட ஏலத்தொகை ரூ.31,60,790/- மற்றும் வருமான வரித்தொகை ரூ.71,650/- மாநகராட்சி நிதியில் வரவாக்கப்படாமலும் அதன் பின் குத்தகை தொகை செலுத்த கோரி வரைவு அனுப்பியும் இது வரை செலுத்தப்படாததால் காவல் துறை மூலம் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி கோவை மாநகர காவல் துறையில் 07.05.2013-ம் தேதியில் புகார் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. (2) வார்டு எண்.25 சிவன் கோயில் அருகில் பூமார்க்கெட் கடை எண்.1-க்கு திரு.M.A.கலீல்ரஹ்மான் உரிமதாரர் கடை வாடகை நிலுவை ரூ.948000/-, (அக்டோபர் 2013 வரை) அபராத வட்டி மற்றும் சேவை வரி செலுத்தாமல் மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். ஒரு வருட வாடகை முன்வைப்புத்தொகை ரூ.948000/-செலுத்தி கடையை பொறுப்பேற்றுக்கொண்டார். (3) வார்டு எண்.83 T.K.மார்க்கெட் கடை எண்.T-32-க்கு திரு.M.A.கலீல்ரஹ்மான் உரிமதாரர் கடை வாடகை நிலுவை ரூ.224400/-, (அக்டோபர் 2013 வரை) அபராத வட்டி மற்றும் சேவை வரி செலுத்தாமல் உள்ளார்.

பார்வை 2-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி மாநகராட்சி வணிக வளாக கடைகளுக்கு ஆறு மாதங்களுக்கு மேல் தொடர்ந்து வாடகை தொகை செலுத்தாத கடைகளின் உரிமைத்தை ரத்து செய்து மாநகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பொது மின் ஏலம் கொண்டுவரவும் அக்கடைகளுக்கு செலுத்தியுள்ள வைப்பு தொகைகளை மாநகராட்சி நிதியில் சேர்க்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே தொடர்ந்து மாநகராட்சிக்கு குத்தகை தொகை செலுத்தாமலும் நிதி இழப்பு ஏற்படுத்தியும் வருவதால் திரு.M.A.கலீல்ரஹ்மான் குத்தகைதாரர் பெயரினை மாநகராட்சியில் அனைத்து ஏல இனங்களிலிருந்து நீக்கம் செய்து கருப்பு பட்டியலில் சேர்க்க அனுமதி வேண்டி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.144 நாள்.17.12.2013-ன் படி 1.மாநகராட்சி ஏல இனங்களில் கலந்து கொண்டு தொடர்ந்து மாநகராட்சி விதிகளின்படி வாடகை/குத்தகைத் தொகை செலுத்தாமல் வருவாய் இழப்பை ஏற்படுத்தி வருவதால் திரு.M.A.கலீல்ரஹ்மான் என்பவரை கருப்புபட்டியயலில் சேர்த்து மாமனறத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. 2. பொருளில் இனம் எண்.2. வார்டு 25 பூமார்க்கெட் சிவன்கோவில் அருகில் கடை எண்.1 தொடர்பாக மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு எண்.O.S.NO.2224/2013-ன் மீது பிறப்பிக்கப்படும் உத்தரவின்பேரில் தொடர் நடவடிக்கை எடுக்க மாமன்றத்தில் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. 3. மேற்படி வார்டு 25 பூமார்க்கெட் சிவன் கோவில் அருகில் கடை எண்.1 தவிர திரு.M.A.கலீல்ரஹ்மான் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அனைத்து மாதாந்திர/வருடாந்திர குத்தகை இனங்களையும் ரத்து செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டவைகளை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.9659/2012/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 316 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 144 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 72 அவினாசி சாலை மாநகராட்சி வணிகவளாக கடைகள் - பிரஸ்கிளப் மற்றும் கோயம்புத்தூர் ஜெர்னலிஸ்ட் அசோசியேசன் கடை வாடகையினை உயர்வு செய்தது – மறுபரிசீலினை செய்திட கோருவது –தொடர்பாக.

பார்வை :

1. மாமன்ற தீர்மான எண்.184 நாள்.16.08.2012.
2. கோயம்புத்தூர் ஜெர்னலிஸ்ட் அசோசியேசன் 20.11.2012-ம் தேதிய கடிதம்.
3. ஆணையர் அவர்களின் உத்தரவு நாள் 01.122013.
4. வ.வி.ம.நி.கு .தீ.எண்.22 நாள்.21.06.2013.

*******

பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகளில் கோயம்புத்தூர் ப்ரஸ்கிளப் கடை எண்.5-க்கு ரூ.30,406/- மற்றும் கடை எண்.10-க்கு ரூ.15,003/-மாத வாடகையாகவும், கோயம்புத்தூர் ஜெர்னலிஸ்ட் அசோசியேசனுக்கு கடை எண்.20 மற்றும் 21 ஆகியவற்றிக்கு முறையே மாத வாடகை ரூ.15,003/- என ஒவ்வொரு கடைக்கும் நிர்ணயம் செய்யப்பட்டது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி இவற்றிற்கான வாடகையினை குறைத்து தரக் கோரியுள்ளார். பார்வை 3-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவுப்படி 01.04.2013 முதற்கொண்டு இக்கடைகளுக்கு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யலாம்.

**கோயம்புத்தூர் பிரஸ்கிளப்**

1. கோயம்புத்தூர் பிரஸ்கிளப்புக்கு இரண்டு கடைகள் (கடைஎண்5 மற்றும் 10) வழங்கப்பட்டது. அவற்றில் ஒரு கடையினை திரும்ப கோரியதில் 2 கடைகளும் வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். இதில் கடை எண்.5-க்கு (வரிவிதிப்பு எண். 7230905) சந்தை மதிப்பு ரூ.30,406/- முன்னர் நிர்ணயம் செய்த தொகையில் 50% குறைத்து ரூ.15,203/- மாத வாடகை என நிர்ணயம் செய்யலாம். இதனால் மாநகராட்சிக்கு ரூ.14,443/- மாதம் கூடுதல் வருவாய் கிடைக்கும்.
2. கடை எண். 10 (வரிவிதிப்பு எண். 7230910)-க்கு முன்னர் நிர்ணயம் செய்த வாடகை தொகை ரூ. 15003/-யினை தொடரலாம்.

**கோயம்புத்தூர் ஜெர்னலிஸ்ட் அசோசியேசன்**

3. கோயம்புத்தூர் ஜெர்னலிஸ்ட் அசோசியேசன் கடை எண்.20 (வரிவிதிப்பு எண். 7230920) முன்னர் 01.07.2004-ல் ரூ.575/- என்ற மிக குறைந்த மதிப்பில் 15% உயர்வு செய்தால் தற்பொழுது ரூ.874/- மாதம் ஒன்றுக்கு என்ற மதிப்பு பெறப்படும். எனவே ரூ.15,003/-ல் 50% ஆக குறைத்து மாதம் ரூ.7502/- என நிர்ணயம் செய்யலாம்.
4. கடை எண். 21 (வரிவிதிப்பு எண். 7230921)-க்கு ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்து விட்டதால் வாடகையினை குறைக்க இயலாது. முன்னர் நிர்ணயம் செய்த தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.15,003/- என நிர்ணயம் செய்யலாம்

மேலும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்து மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும் இத்துடன் சேவை வரி ரூ.12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டத்தில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.22 நாள்.21.06.2013-ல் அலுவலக குறிப்பு மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 01.04.2014 முதல் உயர்வு செய்ய மாமன்றத்தின் முடிவிற்கு

ந.க.எண். 5232/12/A1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 317 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 22 நாள் 21.06.2013 ஐ ஏற்று பொருளுக்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.25-ல் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை) தரைதளம் மற்றும் முதல் தளம் - புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை : வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.157 நாள்.17.12.2013.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டுஎண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை) மாநகராட்சி வணிக வளாகத்தில் புதியதாக தரைதளத்தில் ஏழு கடைகள் மற்றும் முதல் தளத்தில் மூன்று கடைகள் கட்டப்பட்டுள்ளன.

மேற்படி புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் தரை தளத்தில் கடை எண். 1 முதல் 7 வரை | 7 | 186 (கடை ஒன்றுக்கு) | 73/- (கடை ஒன்றுக்கு) | 13,578/- (கடை ஒன்றுக்கு) |
| 2 | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் முதல் தளத்தில் கடை எண். 8 | 1 | 584 | 73/- | 42,632/- |
| 3 | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை)-ல் முதல் தளத்தில் கடை எண். 9 மற்றும் 10 | 2 | 385 (கடை ஒன்றுக்கு) | 73/- (கடை ஒன்றுக்கு) | 28,105/- (கடை ஒன்றுக்கு) |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.157 நாள்.17.12.2013-ன் படி அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீமானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை (கடை எண்.1 முதல் 7 வரை) | -ரூ.1,50,000/- |
| வைப்புத்தொகை (கடை எண்.8) | -ரூ.3,50,000/- |
| வைப்புத்தொகை (கடை எண்.9 மற்றும் 10) | -ரூ.2,50,000/- |
| காப்புத்தொகை | -ரூ.75,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | -ரூ.3,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | -ரூ1,50,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.10925/2013/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 318 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் முதல் தளத்தில் அமைந்துள்ள கடைகளுக்கு 10 சதவீதம் வாடகையினை குறைக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.50, வார்டு எண்.72, வார்டு எண்.25 மற்றும் வார்டு எண்.54 கீழ் காணும் வணிக வளாகத்தில் உள்ள கடைகள் - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – ஒப்படைத்தல் - தொடர்பாக

பார்வை- 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.26.11.2013
2. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.170 நாள்.17.12.2013

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 13.11.2013-ம் தேதி மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

(அ)

| வ.எண். | இனம் | 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 13.11.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு கிழக்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.1 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.9,855/- | ரூ.9,855/- திரு.K.ராஜேந்திரன் (மின்ஏலம் ) | ரூ.18,350/- திரு.K.ராஜேந்திரன் (ஒப்பந்தப்புள்ளி ) |
| 2 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு கிழக்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.2 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.9,800/- | ரூ.9,800/- திருமதி.N.செல்வி (மின்ஏலம் ) | ரூ.18,670/- திருமதி.N.செல்வி (ஒப்பந்தப்புள்ளி ) |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு கிழக்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.3 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.10,200/- | ரூ.10,200/- திருமதி.M.சௌந்திரவள்ளி (மின்ஏலம் ) | ரூ.18,950/- திருமதி. M.சௌந்திரவள்ளி (ஒப்பந்தப்புள்ளி ) |
| 4 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு கிழக்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.4 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.10,500/- | ரூ.10,500/- திரு.K.நாகேந்திரா (மின்ஏலம் ) | ரூ.13,100/- திரு.S.சங்கர் (ஒப்பந்தப்புள்ளி ) |

மேற்படி (அ) இனத்திற்கு மூன்றாம் முறை 13.11..2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.1,2,3 மற்றும் 4 ஆகிய கடைகளுக்கு(நான்கு கடைகள்) அரசு நிர்ணய மதிப்பீடு தொகையை காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தை ஒப்படைசெயயலாம் .

(ஆ)

| வ.எண் | இனம் | 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 13.11.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.1 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.34,200/- | ரூ.34,200/- திரு.B.ஜோயல் மோசஸ் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.36,000/- திரு.S.ராஜேஸ்வரி (ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.3 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.31,000/- | ரூ.31,000/- திரு. R.ரிஜாய் கிருஷ்ணன் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.33,333/- திரு. R.ரிஜாய் கிருஷ்ணன் (ஒப்பந்தப்புள்ளி) |
| 3 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.4 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.35,700/- | ரூ.35,700/- திருமதி.J.செல்வ சங்கீதா (ஒப்பந்தப்புள்ளி) | - |
| 4 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.5 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.33,100/- | ரூ.33,100/- திரு.S.S.ஆல்பர்ட் செல்வம் (மின்ஏலம்) | ரூ.33,400/- திரு.S.S.ஆல்பர்ட் செல்வம் (ஒப்பந்தப்புள்ளி) |
| 5 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.6 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.34,100/- | ரூ.34,100/- திரு.J.ரமேஷ் (மின்ஏலம்) | ரூ.34,300/- திரு.J.ரமேஷ் (ஒப்பந்தப்புள்ளி) |
| 6 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.7 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.34,700/- | ரூ.34,700/- திரு.V.M.சம்சுதீன் (மின் ஏலம்) | ரூ.42,222/- திரு.சிக்கந்தர் பாஷா (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி (ஆ) இனத்திற்கு நான்காவது முறை 13.11.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.1,3,5,6 மற்றும் 7 உள்ள கடைகளுக்கு(ஐந்து கடைகள்) அரசு நிர்ணய மதிப்பீடு தொகையை காட்டிலும் கூடுதலாக மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேலும் 13.11.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.4க்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் இக்கடைக்கு (கடை எண்.4) 24.09.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் திருமதி.J.செல்வ சங்கீதா அவர்களிடமிருந்து அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.27,750/- காட்டிலும் கூடுதலாக ரூ.35,700/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினங்களை (கடை எண்.1,3,4,5,6 மற்றும் 7 (ஆறு கடைகள்) ஒப்படைசெய்யலாம்.

(இ)

| வ.எண். | இனம் | 13.11.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.25 மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் சிவன் கோயில் அருகில் தரை தளத்தில் கடை எண்.2(160சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.60,000/- | ரூ.60,500/- திரு.P.பாலகிருஷ்ணன் (மின்ஏலம் ) |

மேற்படி (இ) இனத்திற்கு 13.11.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.60,000/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.60,500/-க்கு திரு.P.பாலகிருஷ்ணன் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இவ்வினத்தை திரு.K..வேதஸ்வரன் என்பவருக்கு மாத வாடகை ரூ.60,000/-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வாடகை செலுத்தாத காரணத்தால் அவருக்கு வழங்கப்பட்ட உரிமம் மாமன்ற தீர்மான எண். 256 நாள்.25.10.2013-ல் ரத்து செய்யப்பட்டு அவர் செலுத்திய தொகைகள் பறிமுதல் செய்து, மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. திரு.P.பாலகிருஷ்ணன் அவர்களின் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைசெய்யலாம்.

(ஈ)

| வ.எண். | இனம் | 13.11.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.54 காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் உள்ள தகவல் மைய அறை (224சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.16,317/- | ரூ.21,200/- திருமதி.T.சுலோச்சனா (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி (ஈ) இனத்திற்கு 13.11.2013-ல் முதல் முறையாக நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.16,317/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.21,200/-க்கு திருமதி.T.சுலோச்சனா அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இவ்வினத்தை ஒப்படைசெய்யலாம்.

அ முதல் ஈ வரை உள்ள இனங்களிலுள்ள கடைகளை ஒப்படைக்கலாம்.

மேற்படி கடையை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மான எண்.170 நாள்.17.12.2013-ன்படி உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று ஒப்படைச் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அ முதல் ஈ வரை அனுமதிக்கலாம். ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 319 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 170 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண். 22 விவேகா மகளிர் சுய உதவிக்குழு நடத்தி வந்த நியாய விலை கடை எண். 62 ( கதவு எண். 14) காமராஜபுரம் – சிங்காநல்லூர் நகரக்கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது தொடர்பாக. |
|---|---|
| பார்வை : | 1. மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறை ஆணை ந.க.எண்.1355/2012 கீ 9 நாள். 25.05.2012.<br>2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 18.10.2013<br>3. சிங்காநல்லூர் நகரக் கூட்டுறவு கடன் சங்கம் அவர்களின் கடிதம் நாள். 26.08.2013 |

பார்வையில் கண்டுள்ள சிங்காநல்லூர் நகரக் கூட்டுறவு கடன் சங்கம் அவர்களின் கடிதத்தில் வார்டு எண். 22 விவேகா மகளிர் சுய உதவிக் குழு நடத்தி வந்த நியாய விலை கடை எண். 62 (கதவு எண்.14) காமராஜாபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல் முறை ஆணை ந.க.எண்.1355/2012/கீ9 நாள். 25.05.2012–ன் படி 01.06.2012 முதல் எங்கள் சங்கம் ஏற்று நடத்தி வருகிறது என தெரிவித்துள்ளனர்.

மேற்படி வரிவிதிப்பு எண். 2220365 விவேகா மகளிர் சுய உதவி குழு மேற்படி கடையை நடத்தி வந்துள்ளனார். தற்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 1355/2012/கீ9 நாள். 21.05.2012–ன்படி 01.06.2012 முதல் மேற்படி நியாயவிலைக் கடையினை சிங்காநல்லூர் நகரக் கூட்டுறவு கடன் சங்கம் நடத்தி வருகிறது. மாநகராட்சிக்கு எவ்வித தகவல்களும் தெரிவிக்கப்படவில்லை.

விவேகா மகளிர் சுய உதவிக்குழு 2010 – 2011 ஜனவரி முதல் 2012 – 2013 மே மாதம் வரை வரிவிதிப்பு எண். 2220365 வட்டியுடன் ரூ.6591/– செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதால் தொகையை வசூல் செய்ய தொடர் நடவடிக்கை எடுக்கலாம்.

எனவே மேற்படி கடையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை கடிதம் மூலம் கூட்டுறவுத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஆணையை ஏற்று விவேகா மகளிர் சுய உதவிக்குழு பெயரிலிருந்து செயலாளர் சிங்காநல்லூர் நகரக்கூட்டுறவு கடன் சங்கம் பெயருக்கு மாற்றம் செய்வது குறித்தும், பழைய வரிவிதிப்பு 2220365 எண்ணில் உள்ள கேட்புத் தொகையை 01.06.2012 முதல் சிங்காநல்லூர் நகரக்கூட்டுறவு கடன் சங்கத்திற்கு புதிய வரிவிதிப்பு ஏற்படுத்தி கேட்பு தொகையை மாற்றம் செய்து வாடகை வசூல் செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 159 நாள்.17.12.2013–ன்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.1476/2012/அ1(மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 320 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 159 நாள் 17.12.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

**பொருள்:** குத்தகை - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் வருடாந்திர குத்தகை இனங்கள் 2014-15-ம் ஆண்டிற்கு மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு 5% உயர்வு செய்து பொதுஏலம் கோர அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

**பார்வை :** அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட குத்தகை இனங்களுக்கு பார்வையில் காணும் அரசாணையின்படி 2013-14-ல் வழங்கப்பட்ட உரிமத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2014-15-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்து மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொது ஏலம் கோரும் விவரமும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**பொது மின் ஏலத்திற்கு கொண்டு செல்பவை**

| வ. எ ண். | குத்தகை இனங்கள் | 2013-14 ஆண்டிற்கான குத்தகை தொகை | 2014-15-ம் ஆண்டு ஏலத் தொகையில் 5% உயர்வுக்கு பின் குத்தகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | தடாகம் ரோடு வாழைக்காய்மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | - | - | தற்பொழுது 2013-14-ஆம் ஆண்டிற்கு ரூ. 2,54,555-க்கு ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டு மாமன்றத்தின் முடிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 2. | மேட்டுபாளையம் ரோடு எம்.ஜி.ஆர். மொத்தகாய்கறி மார்க்கெட் நவீன கட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 257250 | 270113 | மூன்றாண்டு முடிவுற்ற ஏல இனங்கள் ( பொது ஏலம்) |
| 3. | கவுண்டம்பாளையம் அசோக்நகர் மேல்பகுதி ஆண்,பெண் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1922 | 2018 | மூன்றாண்டு முடிவுற்ற ஏல இனங்கள் ( பொது ஏலம்) |
| 4. | கவுண்டம்பாளையம் அசோக்நகர் கீழ்பகுதி பெண்கள் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3308 | 3473 | மூன்றாண்டு முடிவுற்ற ஏல இனங்கள் ( பொது ஏலம்) |

மேற்படி 2013-14-ல் வழங்கப்பட்ட உரிமத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2014-15-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்து மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி செய்தித்தாளில் அறிவிப்பு செய்வதற்கும், அதற்குண்டான செலவின தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுதீர்மான எண்.173 நாள். 17.12.2013-ன்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 12374/2013/அ1(மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 321 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 173 நாள் 17.12.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

**பொருள்:** குத்தகை - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் வருடாந்திர குத்தகை இனங்கள் 2014-15-ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறுஏலம் கொண்டு வரஅனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

**பார்வை :** அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட குத்தகை இனங்களுக்கு பார்வையில் காணும் அரசாணையின்படி 2013-14-ல் வழங்கப்பட்ட உரிமத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2014-15-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்து உரிமம் ஒதுக்கப்பட வேண்டிய இனங்களுக்கு விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**புதுப்பிக்கப்படவேண்டியவை**

| வ எண். | ஏலதாரர் பெயர் | குத்தகை இனங்கள் | குத்தகை காலம் | 2013-14-ம் ஆண்டிற் கான குத்தகை தொகை ரூ. | 2013-14-ம் ஆண்டு ஏலத் தொகையில் 5% உயர்வுக்கு பின் குத்தகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.கே.சண்முகசரவணன் | வடவள்ளி தினசரிசந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 01.04.2012 - 31.03.2015 | 1,18,650 | 124583 |
| 2. | திரு.கே.சண்முகசரவணன் | கவுண்டம்பாளையம் ஆடு அறுமனை (வார்டு எண்.5,6,7,8,9) | 01.04.2012 - 31.03.2015 | 49,140 | 51597 |
| 3. | திரு.எம். அம்மாசை | வடவள்ளி பஸ் நிலையம் அருகில் நவீன கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 01.04.2012 - 31.03.2015 | 78,225 | 82136 |
| 4. | திரு.தர்மராஜ் | தடாகம் ரோடு நவீனகட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2013-31.03.2016 | 3,78,000 | 396900 |
| 5. | திரு.பி.முருகேசன் | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் நவீனக்கட்டண கழிப்பிடம் கட்டணம் வசுலிக்கும் உரிமம் | 1.4.2012-31.03.2015 | 8,52,600 | 895230 |
| 6. | திரு.பி. முருகேசன் | டி.பி.ரோடு பள்ளி வளாகத்தில் உள்ள மைதானத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2012-31.03.2015 | 18,12,300 | 1902915 |
| 7. | திரு.கே.யுவராஜ் | வடவவள்ளி வாரச்சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2012-31.03.2015 | 1,66,950 | 1752975 |
| 8. | திரு.A.அன்சாரி | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2012-31.03.2015 | 24,01,875 | 2521969 |
| 9. | திரு.ஜே.சுதாகர் | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணாதினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2012-31.03.2015 | 44,31,000 | 4652550 |
| 10. | திரு.எஸ்.மூர்த்தி | காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2012-31.03.2015 | 5,36,550 | 563378 |
| 11. | திரு.K.A.அபுதாஹீர் | மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி மார்க்கெட்டுக்கு வரம் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2013-31.03.2016 | 81,00,000 | 8505000 |
| 12. | திரு.ஜெபமாலை ராஜ் | காந்திபார்க் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 01.04.2013-31.03.2016 | 3,42,000 | 359100 |
| 13. | திரு.V.மணிவண்ணன் | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 01.04.2013-31.03.2016 | 8,18,010 | 858910 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | திரு.R.பாலசுப்ரமணி | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள் பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 01.04.2013 - 31.03.2016 | 2,92,500 | 307125 |
| 5. | திரு. R.பாலசுப்ரமணி | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் தரைதளத்திலுள்ள ஆண்கள் , பெண்கள் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 01.04.2013 - 31.03.2016 | 459900 | 482895 |
| 16. | திரு.உமாசங்கர் | மருதமலை அடிவாரம் இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிம் மற்றும் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.4.2013-31.03.2016 | 190000 | 199500 |

உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்கும் குத்தகை தாரருக்கு மேற்குறிப்பிட்டுள்ள குத்தகையினங்களை 2013-14-ம் ஆண்டிற்கான ஏலத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2014-15-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்யவும், சேவை வரி வசூலிக்கவும் உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்காத குத்தகைதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து, அவர்களது வைப்புத்தொகையை பறிமுதல் செய்து கருப்பு பட்டியலில் பெயர் சேர்க்கவும் அவ்வினங்களை மறுஏலம் கொண்டுவர வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுதீர்மான எண்.173 நாள். 17.12.2013-ன்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 12374/2013/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 322 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 173 நாள் 17.12.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 28**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண். 24, சிங்காநல்லூர் கூட்டுறவு பண்டகம் நடத்தும் நியாயவிலைக் கடை எண்.57EI001 ஆசாத் வீதி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் மாநகராட்சி – வார்டு எண். 24 சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள கட்டிடத்திற்கு மாற்றம் செய்து மேற்படி கட்டிடத்திற்கு பொதுபணித் துறை மதிப்பீட்டின் படி வாடகை தொகை நிர்ணயம் செய்து மேற்படியாருக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது தொடர்பாக.

பார்வை : சிங்காநல்லூர் நுகர்வோர் கூட்டுறவு பண்டகம் சாலை துணை பதிவாளர் அவர்களின் விண்ணப்பம் ந.க.எண்.1111/2013/பொவிதி2 நாள். 11.10.2013

*******

பார்வையில் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 24 சிங்காநல்லூர் கூட்டுறவு பண்டகம் நடத்தும் நியாயவிலைக் கடை எண்.57EI001 ஆசாத் வீதி, ஆர்.எஸ்.புரம், இயங்கி வரும் நியாய விலைக்கடையின் தரை தளம் புதுப்பிக்க வேண்டியுள்ளதால் தற்காலிகமாக மேற்படி நியாய விலை கடையின் மிக அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் நடத்த அனுமதி கோரியுள்ளார்.

மேலும் மேற்கு மண்டலத்தில் வார்டு எண். 24–ல் சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடம் 267.62 சதுரடி அளவு கொண்டதாகும். மேற்படி கட்டிடத்திற்கு பொதுபணித் துறை மதிப்பு 1 சதுரடிக்கு ரூ.13/– வீதம் 267.62 சதுரடிக்கு மாத வாடகை ரூ.3478/– (267.62x13) ஆகும். மேற்படி சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள கட்டிடத்தை சரி செய்து சிங்காநல்லூர் கூட்டுறவு பண்டகம் நடத்தும் நியாயவிலைக் கடைக்கு ரூ.3478/– மாத வாடகை தொகை அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் மேற்படி கடையை ஒதுக்கீடு செய்து முன் அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு கோரி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 153 நாள்.17.12.2013–ன்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.10121/2013/அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 323 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 153 நாள் 17.12.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 2014-2015 ம் ஆண்டு குத்தகை இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு உரிமம் புதுப்பிப்பது மற்றும் உரிம காலம் முடிவடைந்த இனத்திற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது - தொடர்பாக

பார்வை : 1. அரசாணை எண் 78 ந.நி.ம.கு.வ.துறை (மா.ந.2) நாள் 25.05.2009
2. மாமன்ற தீர்மான எண் 288 நாள் 29.11.2012.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களை 2012 - 2015 வரை குத்தகை பெற்றுள்ள குத்தகைதாரர்கள் அரசாணை எண் 78 நாள் 25.05.2009 ந.நி.ம.கு.வ.துறை (மா.ந.2)ல் தெரிவித்துள்ளபடி 2013 – 2014 ம் ஆண்டிற்கான குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2014- 2015 ம் ஆண்டுக்கு உரிமம் புதுப்பிப்பு செய்வதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்புதல் கடிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | உரிமம் வழுங்கப்பட்ட மாமன்ற தீர்மான எண் / நாள் | உரிமம் வழுங்கப்பட்ட ஆண்டு | உரிமம் நீட்டிப்பு வழக்கப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | துடியலூர் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.சி.ரெங்கராஜ் | 40/ 25.05.2012 | 2012- 2013 | 2014 - 2015 மூன்றாம் ஆண்டு |
| 2 | துடியலூர் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.கே.தீபன் | 288/ 28.03.2012 | 2012- 2013 | 2014 - 2015 மூன்றாம் ஆண்டு |
| 3 | துடியலூர் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திருமதி.பி.விஜயா | 8 / 27.04.2012 | 2012- 2013 | 2014 - 2015 மூன்றாம் ஆண்டு |

மேற்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி முந்தைய ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து சேவை வரி வசூலிக்கவும் 2014 - 2015 ம் ஆண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்யவும் மேலும் 2011 – 2014 ம் வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் அளிக்கப்பட்ட கீழ்குறிப்பிட்ட இனத்திற்கு 31.03.2014 உடன் உரிம காலம் முடிவடைவதால் இவ்வினத்திதை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 176 நாள் 1712-2013-ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

1. நவீன கட்டண கழிப்பிடம் பி.என்.பாளையம் ( வார்டு எண் 55)

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780 /2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 324 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 176 நாள் 17.12.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 30

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஏலக் கோரிக்கையின் அடிப்படையில் கடைகளை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி கோருவது - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 01ல் துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள பன்னிரெண்டு கடைகளுக்கு இரண்டாவதுமுறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.11.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 2, 3, மற்றும் 4 ஆகிய மூன்று கடையை தவிர ஏனைய கடைகளுக்கு ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் கீழ்குறிப்பிட்டுள்ள கடை எண் 1, 7, 11 மற்றும் 12 ஆகிய நான்கு கடைகளுக்கு மட்டும் அரசு மதிப்பு ரூ.6000/- காட்டிலும் உயர்ந்தபட்சமாக ரூ.12000/- மேல் ஏலம் கோரியுள்ளனர்.

<u>கடை எண் 1</u> (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.பாலதண்டாயுதம் | - | ரூ.7500/- | ரூ.15150/- |

மேற்படி திரு.பாலதண்டாயுதம் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.15150/- க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

<u>கடை எண் 7</u> (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. பி.ஆர்.சதாசிவம் | ரூ.7700/- | - | ரூ.12250/- |
| 2 | திருமதி.ஆர்.உமா | ரூ.9000/- | ரூ.14405/- | ரூ.12600/- |

மேற்படி திருமதி.ஆர்.உமா என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.14405/- க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

<u>கடை எண் 11</u> (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. கே.எஸ்.கருணாபிரசாத் | ரூ.9100/- | ரூ.12200/- | ரூ.10500/- |
| 2 | திரு.டி.ஜெகதீசன் | - | - | ரூ.10500/- |
| 3 | திரு.சந்திரன் | - | - | ரூ.13250/- |

மேற்படி திரு.சந்திரன் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.13250/- க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

<u>கடை எண் 12</u> (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. கே.எஸ்.கருணாபிரசாத் | ரூ.9600/- | ரூ.11000/- | ரூ.10500/- |
| 2 | திரு.டி.சிவராஜ் | - | - | ரூ.10500/- |
| 3 | திரு.மணிகண்டன் | - | - | ரூ.13240/- |

மேற்படி திரு.மணிகண்டன் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.13240/- க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்று வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 139 நாள் 17-12-2013-ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 325 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 139 நாள் 17.12.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 31

பொருள் : வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 4க்கு உட்பட்ட அப்பநாயக்கன்பாளையம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள ரேசன் கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக

பார்வை : உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 13.11.2013

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 04ல் அப்பநாயக்கன்பாளையம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதிதாக 28’3’’ X 11’ 6’’ = 327 ச.அடி என்ற அளவில் புதிதாக ரேசன் கடை கட்டப்பட்டுள்ளது இக்கடைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6205/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வையில் காணும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மாத வாடகை அடிப்படையில் மேற்குறிப்பிட்டுள்ள கடையினை ரேசன் கடைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 137 நாள் 17-12-2013-ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 326 நாள் 30.12.2013

பொருளில் குறிப்பிட்டுள்ள கடை எண் 4-க்கு மாத வாடகை ரூ.2000- என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 32

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 செங்காடு பகுதியில் முதல் தளத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நடைபெற்ற நான்காவது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள 4, 5 மற்றும் 6 ஆகிய மூன்று கடைகளுக்கு நான்காவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.11.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 6க்கு மட்டும் கீழ் குறிப்பிட்டுள்ள நபர் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டார். மீதமுள்ள கடைகளுக்கு ஒருவரும் ஏலத்தொகை செலுத்தப்படவில்லை.

மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

**கடை எண் 6** (அரசு மதிப்பு ரூ.6250/- கடையின் அளவு 21 X 11)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|
| 1 | திரு.பி.சதீஸ்குமார் | ரூ.7000/- |

மேற்படி கடைக்கு தொடர்ந்து மூன்று முறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை எனவே 13.11.2013 ம் தேதிய ஏலத்தில் திரு.பி.சதீஸ்குமார் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக மாதம் ஒன்றுக்கு ரூ.7000/- க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார்.

மேற்படி ஏலக்கோரிக்கையினை ஏற்று கடையினை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 140 நாள் 17-12-2013-ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 3043/2013/அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 327 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 140 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 33

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 01ல் துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டது போக மீதமுள்ள 8 கடைகளுக்கு மூன்றாவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.11.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 3 னை தவிர ஏனைய மற்ற கடைகளுக்கு ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் கடை எண் 4, 5, 7 மற்றும் 9 ஆகிய நான்கு கடைகளுக்கு மட்டும் அரசு மதிப்பு ரூ.6000/- காட்டிலும் உயர்ந்தபட்சமாக ரூ.12000/- மேல் ஏலம் கோரியுள்ளனர்.

**கடை எண் 4** (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.குணசேகர் | ரூ.8118/- | - | ரூ.10100/- |
| 2 | திரு.எம்.சக்திவேல் | - | ரூ.12250/- | ரூ.12200/- |

மேற்படி திரு.எம்.சக்திவேல் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.12250/- உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

**கடை எண் 5** (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ. எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.பி. சித்ரா மகாலட்சுமி | ரூ.8001/- | - | ரூ.9600/- |
| 2 | திரு.குணசேகர் | - | - | ரூ.10100/- |
| 3 | திருமதி.நிறைமதி | - | - | ரூ.13100/- |
| 4 | திரு.ஜெகதீஸ்பாபு | - | ரூ.13155/- | - |

மேற்படி திரு. ஜெகதீஸ் பாபு என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.13155/- உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

**கடை எண் 7** (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.மணிமேகலை | ரூ.9100/- | ரூ.13600/- | ரூ.13600/- |
| 2 | திரு. என்.செந்தில் குமார் | - | - | ரூ.13652/- |
| 3 | திரு. கே. செந்தில் குமார் | - | - | ரூ.13100/- |

மேற்படி திரு.என்.செந்தில் குமார் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.**13652**/- உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

**கடை எண் 9** (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 24.09.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.இளங்கோ | - | ரூ.10850/- | ரூ.10400/- |
| **2** | திருமதி.அமுதமொழி | ரூ.7860/- | - | ரூ.12600/- |

மேற்படி திருமதி.அமுதமொழி என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.12600/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார். மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்று கடைகளை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 138 நாள் 17-12-2013-ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6303/2013/அ

## மாநகர மன்ற தீர்மானம் எண் 328 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 138 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 34

| | |
|---|---|
| பொருள்: | குத்தகை –கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு – 2014-17ம் மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2014-15ம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்து புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக |
| பார்வை: | 1.அரசு ஆணை (நிலை)எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள். 25.05.2009.<br>2.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 177, நாள்: 17.12.2013. |

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களின் குத்தகைக்காலம் மூன்றாண்டு முடிவுற்ற கீழ்க்கண்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு, 2014-17ம் மூன்று ஆண்டுகளுக்கு மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்177, நாள்17.12.2013-ல் பரிந்துரை செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | குத்தகை இனம் | உரிமக்காலம் முடிவடையும் தேதி |
|---|---|---|---|
| 1. | 69 | இராமநாதாபுரம் மாநகராட்சிக் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2014 |
| 2. | 64 | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் பொருள் பாதுகாப்பு அறை பொருட்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2014 |

மேலும், கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 2013-14ம் ஆண்டின் ஏலத்தொகையுடன் 5% உயர்வு செய்யப்பட்டத்தொகை, சேவைவரி முதலிய தொகைகளைச் செலுத்தும் குத்தகைதாரர்களுக்கு 2014-15ம் ஆண்டிற்கு காலநீட்டிப்பு வழங்கவும், கால நீட்டிப்பினை தொடர மறுக்கும் குத்தகைதாரர்களின் வைப்புத்தொகை முதலிய தொகைகளை பறிமுதல் செய்தும், அவர்களின் பெயர்களை கருப்பு பட்டியலில் சேர்க்கவும் இவ்வினங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி கோரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 177, நாள்17.12.2013ல் கீழ்க்கண்ட குத்தகைதாரர்களுக்கு பரிந்துரை செய்யப்படடது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகை தாரர் பெயர் | 2013-14-ம் ஆண்டு உரிமத் தொகை (ரூபாய்) | 5% உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை (ரூபாய்) | 2014-15-ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய தொகை (ரூபாய்) | சேவை வரி (12.36%) (ரூபாய்) | ஒப்படைக்கும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் வார/தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | எஸ்.எம். செந்தில் குமார் | 6,00,102/- | 30,005/- | 6,30,107/- | 77,881/- | 2-ம் ஆண்டு |
| 2. | சிங்காநல்லூர் ஆடு அறுவைமனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திருநாவுக்கரசு | 2,37,500/- | 11,875/- | 2,49,375/- | 30,823/- | 2-ம் ஆண்டு |
| 3. | உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | எஸ்.எம். செந்தில் குமார் | 2,00,349/- | 10,017/- | 4,00,698/- | 49,526/- | 3-ம் ஆண்டு |
| 4. | சௌரிபாளையம் ஆடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திருநாவுக்கரசு | 3,34,000/- | 16,700 /- | 3,50,700 /- | 43,347/- | 2-ம் ஆண்டு |
| 5. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் | எஸ்.எம் . சபேர் அலி | 15,02,550/- | 75,128/- | 15,77,678/- | 1,95,001/- | 3-ம் ஆண்டு |
| 6. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஒ.எ. சையது இப்ராஹிம் | 7,35,000/- | 36,750/- | 7,71,750/- | 95,388/- | 3-ம் ஆண்டு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள தொலைபேசி பூத் | எஸ். ராமசாமி | 34,650/- | 17,325/- | 36,383/- | 4,497/- | 3-ம் ஆண்டு |
| 8. | புலியகுளம் மாநகராட்சிக் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஜி. ரங்கராஜ் | 1,47,009/- | 7,350/- | 1,54,359/- | 19,079/- | 3-ம் ஆண்டு |

மேற்கண்ட இனங்களை மாமன்றத்தின் ஒப்புதல் பெறுவதற்கு மாமன்றகூட்டத்தாள் வரைவு சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் :864/2012/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 329 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 177 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 35**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்- வார்டு எண் 57-ற்குட்பட்ட சின்னசாமி லே அவுட் பகுதியிலுள்ள வணிக வளாகக் கடை எண் 2-ற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 109, நாள் 22.10.2013-ன் படி மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.11.2013 –ம் தேதி நடைபெற்றது – மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக.

பார்வை : 1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 19.11.2013.
2.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 135, நாள் 17.12.2013

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 57 சின்னசாமி லே அவுட் பகுதியில் கட்டப்பட்டுள்ள கடைகள் 2-ற்கு கடந்த 25.07.2013, 30.08.2013 மற்றும் 24.09.2013 ஆகிய தேதிகளில் மூன்று முறை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவற்றிற்கு 24.09.2013-ம் தேதிய ஏல நடவடிக்கை விபரம் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு வைக்கப்பட்டதில், மேற்படி கடை கூடுதல் தொகைக்கு ஏலம்போக வாய்ப்பு உள்ளதாக கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 109, நாள் 22.10.2013 தேதிய தீர்மானத்தில் மறு ஏலம் விட தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நான்காவது முறையாக 13.11.2013-ம் தேதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவற்றில் கலந்து கொண்டவர்கள் கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக்கேள்வியை பதிவு செய்துள்ளனர்.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாத வாடகை ரூ.) | மின் ஏலத்தொகை (மாத வாடகை ரூ.) | உயர்ந்த ஏலத்தொகை (மாத வாடகை ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | திரு. எஸ்.சண்முகநாதன் | 8301/- | 8350/- | 8350/- |
| 2 | திரு. பி. சங்கரசுப்பு | 8250/- | - | - |

மேற்காணும் கடைக்கு மாநகராட்சி மதிப்பாக ரூ.8100/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்ற மறு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட ஏலதாரர் திரு. எஸ்.சண்முகநாதன் என்பவர் உச்சக்கேள்வி தொகை ரூ.8350/-க்கு பதிவு செய்துள்ள உயர்ந்த பட்ச கேள்வித்தொகை மாநகராட்சி மதிப்பைவிட கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி உச்சக் கேள்வியை ஏற்பது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 135, நாள் 17.12.2013 -ல் பரிந்துரை செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 4964 /2013/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 330 நாள் 30.12.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 135 நாள் 17.12.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 36**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்திமிடம் குத்தகைக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக.

பார்வை : 1.ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள் 19.11.2013.
2.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 136, நாள் 17.12.2013

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 64- சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தை 2013- 2016-ம் ஆண்டிற்கான குத்தகைக்கு கடந்த 13.11.2013-ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏல விவரம் பார்வையில் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | மின்ஏலத் தொகை | உச்சக்கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. சி. செல்வம் | 15,95,000/- | - | - |
| 2 | திரு. ஜி. ரங்கராஜ் | 16,20,000/- | 16,00,000/- | - |
| 3 | திரு. எ. நமச்சிவாயம் | - | - | - |

மேற்படி இனத்திற்கு மாநகராட்சி மதிப்பாக ரூ.15,95,000/- நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இந்நிலையில் தற்போது நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களில் திரு.ஜி. ரங்கராஜ் என்பவர் பதிவு செய்துள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.16,20,000/-ம் என்பது மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள மதிப்பைவிட கூடுதலாகும். தற்பொழுது நடத்தி வரும் உரிமதாரரை 31.12.2013 வரை நடத்த அனுமதிக்கவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்136,நாள்17.12.2013 -ல் பரிந்துரை செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 2921/2013/கிஅ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 331 நாள் 30.12.2013**

மறுஏலம் கோரலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 37**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.11.2013-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - மாமன்றத்தின் அனுமதி கோருவது - தொடர்பாக.

பார்வை: 1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.13.11.2013.
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.26.11.2013.
3. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.169 நாள்.17.12.2013.

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2013-2016 மற்றும் வணிகவளாக கடைகள் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 13.11.2013-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்சம் ஏலம் கோரியவர்கள் கீழ்க்கண்டவாறு.

ஏலம் நடைபெற்ற தேதி – 13.11.2013

| வ. எண் | குத்தகை இனங்கள் & வணிகவளாகங்கள் | கடந்த வருட ஏலத் தொகை யில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | 2013-14-ம் ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத் தொகைகளி ன் விபரம் | | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தேதி | தொகை | | | | |
| 1. | தடாகம் ரோடு வாழைக்காய் மண்டியில் கட்டணம் வசூலிகும் உரிமம் | 3,47,288 | 26.12.12<br>23.01.13<br>13.02.13<br>28.02.13<br>13.03.13<br>27.3.13<br>17.4.13<br>15.5.13<br>12.6.13<br>24.9.13 | Nil<br>Nil<br>Nil<br>ரூ.210000<br>ரூ.251000<br>ரூ.251000<br>ரூ.252000<br>ரூ.252155<br>ரூ252500<br>ரூ.253000 | M.மனோகரன் | - | 254555 | 254555 |

வணிகவளாக கடைகள்

| வ. எ ண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | 2-வது ஏலம் | 3-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 2. | வார்டு எண்.23-ல் திருவேங்கடசாமி சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடை எண். 1 முதல் 11 வரையுள்ள (10 x 21 =210 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | |
| | கடை எண்.1 | 33000 | M.துரைராஜ்<br>G.கண்ணன் | 33000<br>17200 | 35000<br>19000 | - | ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை | 35000 |
| | கடை எண்.3 | 36000 | G.சிவக்குமார் | - | 45959 | - | ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை | 45959 |
| | கடை எண்.4 | 33333 | ஆர்.ஜி.செல்வம் | - | 45959 | - | ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை | 45959 |
| | கடை எண்.5 | 27000 | L.சாந்தி<br>I.செந்தில் | 27000<br>- | 32000<br>- | 32090<br>- | 32000<br>15000 | 32090 |
| | கடை எண்.10 | 31800 | ஆர்.சுரேந்தர் | 31500 | 31800 | - | 19000 | 31800 |
| | கடை எண்.11 | 36101 | G.சாம்பமூர்த்தி | 36101 | 36101 | - | 27500 | 36101 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | 2-வது ஏலம் | 3-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 3. | வார்டு எண். 23ல் சர்சண்முகம் சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடை எண்.1 முதல் 11 வரையுள்ள (10x16=160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | |
| | கடை எண்.2 | 11000 | K.M.ரவிச்சந்திரன்<br>L.ஜோதிசிவசக்தி<br>ஜாபர் அலி | -<br>-<br>- | 11250<br>13631<br>- | 16650<br>-<br>- | -<br>15650<br>11300 | 16650 |
| | கடை எண்.5 | 13700 | தீபக்குமார்<br>பைசல் | 12000<br>- | 12500<br>- | -<br>14000 | 17900 | 17900 |
| | கடை எண்.6 | 13500 | மோகன்<br>R.அருண்குமார் | -<br>12300 | -<br>13500 | 15650<br>- | 15500<br>- | 15650 |
| | கடை எண்.7 | 15200 | கௌரி மனோகிரி<br>ஜோதிகுமர்லால்<br>கிட்வாணி<br>G.செந்தில்குமார் | -<br><br>-<br>14000 | -<br><br>15200<br>14500 | 16850<br><br>-<br>- | 16800<br><br>15250<br>15000 | 16850 |
| | கடை எண்.9 | 10000 | வெங்கடேஷ்பாபு<br>ஜோதி<br>கே.கிட்வாணி<br>p.ரமேஷ் | -<br>-<br>- | -<br>-<br>13600 | 14525<br>-<br>- | 17601<br>15250<br>13666 | 17601 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | 2-வது ஏலம் | 3-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஓப்பந் தப் புள்ளி தொகை (ரூ.) | உயர் ந்த பட்ச ஓப்பந் தப் புள்ளி தொகை (ரூ.) |
| 4. | வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட கடை எண்.1to 40 வரையுள்ள (10 x 16 =160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | |
| | கடை எண்.8 | 12600 | J.வில்சன் | 12100 | 12600 | - | 13500 | 13500 |
| | கடை எண்.9 | 12900 | S.சுலோச்சனா | 12250 | 12900 | - | 13500 | 13500 |
| | கடை எண்.10 | 12900 | W.ஜெயந்தி | 12050 | 12900 | - | 13500 | 13500 |
| | கடை எண்.21 | 9000 | வசுஸ்போர்ட்ஸ் | - | 15000 | - | 15000 | 15000 |
| | கடை எண்.37 | 11000 | S.முரளி<br>R.அருண்குமார் | -<br>11000 | 13470<br>- | 14000<br>- | 14000<br>13477 | 14000 |
| | கடை எண்.38 | 11000 | S.முரளி<br>R.அருண்குமார் | 11000<br>- | -<br>13790 | 17000<br>- | 14000<br>13799 | 17000 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் (30.8. 2013) | இராண் டாவது ஏலம் | 3-வது ஏலம் (13.11.2013) | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஓப்பந் தப் புள்ளி தொ கை (ரூ.) | உயர் ந்த பட்ச ஓப்பந் தப் புள்ளி தொ கை (ரூ.) |
| 5. | வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் தெற்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட கடை எண்.31 முதல் 38 வரையுள்ள (10 x 16 =160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | |
| | கடை எண்.31 | 15510 | W.ஜெயந்தி | 15510 | 15650 | - | 15550 | 15650 |
| | கடை எண்.32 | 14000 | S.சுலோச்சனா | 14000 | 14490 | - | 15175 | 15175 |
| | கடை எண்.33 | 14000 | J.வில்சன் | 14000 | 15100 | - | 15150 | 15150 |
| | கடை எண்.34 | 14250 | S.சாந்தி | 14250 | 14400 | - | 15150 | 15150 |
| | கடை எண்.35 | 14500 | T.N.விஜயகுமார் | - | 14500 | -- | 15500 | 15500 |
| | கடை எண்.36 | 14600 | S.சரவணன்<br>பிரசாந்சந்த் | - | 14600 | - | 15500<br>12200 | 15500 |
| | கடை எண்.37 | 13900 | எஸ்தர்விஜயா | - | 13900 | - | 15150 | 15150 |
| | கடை எண்.38 | 16800 | D.சுந்தரமூர்த்தி<br>எஸ்தர்விஜயா | 16800<br>- | -<br>14000 | -<br>- | 15500<br>- | 16800 |
| 6 | வார்டு எண்.5 கவுண்டம்பாளையம் பிரிவு ஒணாப்பாளையம் சாலை அசோக் நகர் கிழக்கு பகுதி கடை எண்.6 முதல் 10 வரை (தலா 16’x10’) | | | | | | | |
| | கடை எண். 10 | 7000 | D.குருமூர்த்தி<br>A.ஷானவாஸ் | -<br>- | -<br>- | -<br>7750 | 9000<br>6750 | 9000 |

குத்தகை இனங்கள்

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 2013-14-ம் ஆண்டு இதுவரை 11 முறை ஏலம் விடப்பட்டுள்ளது. 13.11.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் திரு.M.மனோகரன் அரசு நிர்ணயத்தொகை ரூ.3,47,288/- (Base value) விட குறைவாக ரூ.2,54,555/-ற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

## வணிகவளாக கடைகள்

### வரிசை எண்.2-ல் உள்ள திருவேங்கடசாமி சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடைகள்

கடை எண்.1-க்கு 2-வது ஏலம் 24.9.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 3-நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்த பட்சம் ரூ.35000/-ற்கு திரு.M.துரைராஜ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார். தற்பொழுது13.11.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.

கடை எண்.3-க்கு 2-வது ஏலம் 24.9.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 3-நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்த பட்சம் ரூ.45959/-ற்கு திரு.G.சிவக்குமார் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார். தற்பொழுது13.11.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. திரு. G.சிவக்குமார் என்பவர் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை எனகோரி தொகை திரும்ப வழங்க கடிதம் கொடுத்துள்ளார்.

கடை எண்.4-க்கு 2-வது ஏலம் 24.9.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 4-நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்த பட்சம் ரூ.45959/-ற்கு திரு. R.G.செல்வம் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார். தற்பொழுது13.11.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. திரு.R.G.செல்வம் என்பவர் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை எனகோரி தொகை திரும்ப வழங்க கடிதம் கொடுத்துள்ளார்.

கடை எண்.5-க்கு 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.32090/-ற்கு திருமதி.L.சாந்தி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.10-ற்கு 2-வது ஏலம் 24.9.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.31800/-ற்கு திரு.R.சுரேந்தர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். தற்பொழுது நடைபெற்ற 13.11.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் திரு.R.சுரேந்தர் என்பவர் ஒருவர் மட்டும் கலந்துகொண்டு ரூ.19000/-ற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.11-ற்கு முதல் ஏலத்தில் ரூ.36101/-ற்கு, திரு.G.சாம்பமூர்த்தி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். தற்பொழுது நடைபெற்ற 13.11.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் திரு.G.சாம்பமூர்த்தி என்பவர் ஒருவர் மட்டும் கலந்துகொண்டு ரூ.27500/-ற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

### வரிசை எண்.3-ல் உள்ள சர்சண்முகம் சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடைகள்

கடை எண்.2-ற்கு 3 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.16650/-க்கு திரு.K.M.ரவிச்சந்திரன் என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார்.

கடை எண்.5-ற்கு 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.17900/-ற்கு திரு.தீபக்குமார் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.6-ற்கு 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.15650/-ற்கு திரு.மோகன் என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார்.

கடை எண்.7-ற்கு 4 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.16850-ற்கு திரு.கௌரிமனோகிரி என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார்.

கடை எண்.9-ற்கு 3 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.17601-ற்கு திரு.வெங்கடேஷ்பாபு என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

### வரிசை எண்.4-ல் உள்ள மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு புதிதாக கட்டப்பட்ட (கடை எண்.1 முதல் 40 வரை)

கடை எண்.8-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.13500/-ற்கு திரு.J.வில்சன் என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.9-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.13500/-ற்கு திரு.S.சுலோச்சனா என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.10-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.13500/-ற்கு திரு.W.ஜெயந்தி என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.21-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.15000/-ற்கு திரு.வசுஸ்போர்ட்ஸ் என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.37-ற்கு 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.14000/-ற்கு திரு.S.முரளி என்பவர் ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலத்தில் கோரியுள்ளார்.

கடை எண்.38-ற்கு 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.17000/-ற்கு திரு.S.முரளி என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார்.

## வரிசை எண்.5-ல் உள்ள மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் தெற்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (கடை எண்.31 முதல் 38 வரை )

கடை எண்.31-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.15650/-ற்கு திரு.W.ஜெயந்தி என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.32-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.15175/-ற்கு திரு.S.சுலோச்சனா என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.33-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.15150/-ற்கு திரு.J.வில்சன் என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.34-ற்கு உயர்ந்தபட்சம் ரூ.15150/-ற்கு திரு.S.சாந்தி என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.35-ற்கு 1 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.15500/-ற்கு திரு.T.N.விஜயகுமார் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.36-ற்கு 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.15500/-ற்கு திரு.S.சரவணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.37-ற்கு 1 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.15150/-ற்கு திருமதி.எஸ்தர்விஜயா என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

கடை எண்.38-ற்கு 2 நபர்கள் கலந்து கொண்டு திரு.D.சுந்தரமூர்த்தி என்பவர் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.16800/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

## வரிசை எண்.6-ல் உள்ள வார்டு எண்.5 கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக்நகர் கிழக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட

கடை எண்.10-ற்கு 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.9000/-ற்கு திரு.D.குருமூர்த்தி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

எனவே, மேற்காணும் இனங்களை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுதீர்மான எண்.169 நாள்.17.12.2013-ன்படி

1. திருவேங்கடசாமி சாலை கடை எண்.1,5,10,11-க்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கைகளை ஏற்று ஒப்படைப்பு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்தும், கடை எண்.3,4-ஐ மாமன்றத்தின் முடிவுக்கு பரிந்துரை செய்தும் தீர்மானிக்கப்பட்டது.
2.சர்சண்முகம் சாலை கடை எண்.2,5,6,7 மற்றும் 9 ஆகியவற்றிற்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கைகளை ஏற்று ஒப்படைப்பு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்தும்
3.மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் கடை எண்.8,9,10,21,37,38 ஆகிய கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கைகளை ஏற்று ஒப்படைப்பு செய்யவும்,
4. மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் கடை எண்.31,32,33,34,,35,36,37,38 ஆகிய கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கைகளை ஏற்று ஒப்படைப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டது.
5. வரிசை எண்.8-ல் உள்ள வார்டு எண்.5 கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக்நகர் கிழக்கு பகுதியில் கடை எண்.10-க்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கைகளை ஏற்று ஒப்படைப்பு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.
6. தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஒப்படைப்பு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.12794 / 2012 / அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 332 நாள் 30.12.2013**

1. உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய தீர்மானிக்கப்பட்டது.
2. ஏல நிபந்தனைகளின்படி கடையினை பொறுப்பு ஏற்காத ஏலதாரர்களிடமிருந்து வைப்புத் தொகை, காப்புத் தொகை, வங்கி உறுதி சான்றிதழ், வங்கி உறுதி சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ஆகிய தொகைகளை பறிமுதல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 38**

பொருள்: குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் வருடாந்திர குத்தகை இனங்கள் 2014–15ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறு ஏலம் கொண்டு வரவும், மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொது ஏலம் கோர அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.78 ந.நி.(ம) கு.வ.துறை நாள். 25.05.2009.
2. மாநகராட்சி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தீர்மானம் எண்.178 நாள்.17.12.2013

---

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட குத்தகை இனங்களுக்கு பார்வையில் காணும் அரசாணையின்படி 2013–14 ல் வழங்கப்பட்ட உரிமத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்தும், 2014–15ம் ஆண்டிற்கான குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்ய கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>புதுப்பிக்கப்பட வேண்டியவை</u>

| வ. எண் | ஏலதாரர் பெயர் | குத்தகை இனங்கள் | குத்தகை காலம் | 2013–14ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. | 2014–15ம் ஆண்டு ஏலத் தொகையில் 5% உயர்வுக்கு பின் குத்தகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.என்.கந்தசாமி | உக்கடம் ஆடு அறுவை மனை | 01.04.2013–31.03.2016 | 7,91,500 | 8,31,075 |
| 2. | திருமதி. ஆர்.கல்பனா | செட்டிவீதி கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013–31.03.2016 | 2,91,500 | 3,06,075 |
| 3. | திரு.முகம்மது ரபிக் | லாரிப்பேட்டை கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013–31.03.2016 | 62,000 | 65,100 |
| 4. | திரு.அப்துல்சுக்கூர் | லாரிபேட்டை நுழைவுக் கட்டணம் | 01.04.2013–31.03.2016 | 3,00,600 | 3,15,630 |
| 5. | திரு.சோமசுந்தரம் | சின்னசுடுகாடு கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013–31.03.2016 | 99,750 | 1,04,738 |
| 6. | திரு.கே.வி. முனுசாமி | சுண்டகாமுத்தூர் ரோடு கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013–31.03.2016 | 71,400 | 74,970 |
| 7. | திரு.என். முத்துசாமி | தால்பேக்டரி வீதி கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013–31.03.2016 | 1,73,250 | 1,81,913 |
| 8. | திரு.கணேஷ்குமார் | குளத்துப்பாளையம் நவீன கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013–31.03.2016 | 91,250 | 95,813 |
| 9. | திருமதி. எஸ்.ஷகிலாபேகம் | குனியமுத்தூர் சுங்க வசூல் | 01.04.2013–31.03.2016 | 2,11,050 | 2,21,603 |
| 10. | திரு.எம்.அன்புராஜ் | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏலமேடை | 01.04.2013–31.03.2016 | 6,21,000 | 6,52,050 |
| 11. | திரு.எம்.அன்புராஜ் | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013–31.03.2016 | 2,00,006 | 2,10,006 |
| 12. | திரு.மணிகண்டன் | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக் கடை | 01.04.2013–31.03.2016 | 94,788 | 99,527 |
| 13. | திரு.ஜே.பஷீர் | செட்டிபாளையம் ரோடு மாடுவதை சாலை | 01.04.2013–31.03.2016 | 2,95,000 | 3,09,750 |

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனங்களுக்கு **2013–14**ஆம் ஆண்டின் ஏலத்தொகையுடன் **5** சதவிகிதம் உயர்வு செய்யப்பட்ட தொகை, சேவை வரி முதலிய தொகைகளை செலுத்த சம்மதம் தெரிவிக்கும் குத்தகைதாரர்களுக்கு உரிமம் புதுப்பித்து காலநீடிப்பு வழங்கவும், உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்காத குத்தகைதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து, அவர்களது வைப்புத்த்தாகையை பறிமுதல் செய்து கருப்பு பட்டியலில் பெயர் சேர்க்கவும் அவ்வினங்களை மறுஏலம் கொண்டுவர ஒப்பந்தப்புள்ளி செய்தித்தாளில் அறிவிப்பு செய்வதற்கும், அதற்குண்டான செலவின தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். **178** நாள்.**17.12.2013** ன் படியும் மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண். **698/2013/** அ**1**(தெ)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 333 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 178 நாள் 17.12.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 39

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு - வடவள்ளி கிராமம் க.ச.ண்.72/2 A1-ல் உள்ள 47 செண்டில் பேருந்து திருப்பு முனையம் அமைக்க மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை-
1) மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.29284/10/ஆ3 நாள்.25.07.2011.
2) மாமன்ற தீர்மான எண்.25, நாள்.25.04.2013.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடவள்ளி கிராமம் க.ச.எண்.72/2 A1-ல் உள்ள 47 செண்ட் இடத்தில் புதிய பேருந்து திருப்பு முனையம் அமைக்க மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் அத்தீர்மானம் பார்வை 2-ல் கண்டுள்ள தீர்மானத்தின்படி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது பேருந்து திருப்பு முனையம் அமைக்க தி/ள்.எஸ்.பி.எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தாரால் ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பீட்டின்படி பேருந்து திருப்பு முனையம் கட்டுவதற்கு அரசிடம் நிர்வாக அனுமதி, தொழிற்நுட்ப அனுமதியும் பெற வேண்டியுள்ளது. மேலும், உள் கட்டமைப்பு நிதியில் இத் திட்டத்தினை நிறைவேற்ற கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இதற்கான ரூ.3.55 கோடி நிதியினை பெற பேருந்து திருப்பு முனைய கட்டிட வரைபடம் நகர் ஊரமைப்பு துறையில் அனுமதி பெற வேண்டி உள்ளதால் அத்துறையின் அனுமதியும், இத்திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக அனுமதி, தொழிற்நுட்ப அனுமதி அரசிடம் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி இப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம்.

ந.க.எண்.10368/2012/எம்.டி.1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 334 நாள் 30.12.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 40

| | |
|---|---|
| பொருள் :- | கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வார்டு எண் - 13 - ஆர்.கே.நாயுடு லே அவுட் முதல் கோவில் மேடு தெக்கலூர் சாலை வரை விவசாய கல்லூரி வளாகத்தில் குழாய் வடிகால் அமைத்தல் - சம்பந்தமாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வார்டு எண் - 13 - ஆர்.கே.நாயுடு லே அவுட், தாழ்வான பகுதியாக உள்ளது எனவே இப்பகுதியில் உள்ள மழை நீர் வடிகாலில் வெளியேறும் வழிவகை இல்லாததால் மழை நீரானது அரசினர் தொழிற்கல்லூரி மற்றும் விவசாய கல்லூரி வளாகத்தில் தேக்கமடைகிறது.

இதனை சரி செய்யவும் ஆர்.கே.நாயுடு லே அவுட்டில் உள்ள மழை நீர் வெளியேறும் வழிவகை மேற்கொள்ள ஆர்.கே.நாயுடு லே அவுட் முதல் கோவில் மேடு தெக்கலூர் சாலை வரை விவசாய கல்லூரி வளாகத்தில் ஆர்.சி.சி குழாய்கள் அமைத்து வடிகால் வசதி செய்யும் பணிக்கு ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 18.12.2013ன் படி இப் பணிக்கு ரூ.72,50,000 -க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கு நடப்பு நிதியாண்டு 2013-2014-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 11803/2012/ எம் டி 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 335 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 41**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகள் கவுண்டம்பாளையம் வடவள்ளி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் பில்லூர் திட்டம் IIலிருந்து குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யவும் – இப்பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ4255 லட்சத்துக்கு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: 1. கோயம்புத்தூர் மாநகராட்சி மாநகர மன்ற தீர்மான எண்.76 நாள். 18 .6 . 2013
2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல் முறை ஆணை ந.க.எண்19229/பி2/2013/2014 நாள்.24.7.2013.

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.76 நாள். 18.06.2013ல் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி, மற்றும் வீரகேரளம் பகுதிகளுக்கான குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் பில்லூர் IIவது குடிநீர் திட்டம் மற்றும் ஆழியாறு குடிநீர் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ1687.00 லட்சத்தில் மானியத் தொகை ரூ 1113.62 லட்சம் போக மீதத் தொகை ரூ573.38 லட்சம் மாநகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளவும், மேலும் 5சிப்பங்களாக பிரித்து பணிகள் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பவும் மாமன்றம் அனுமதி வழங்கி உள்ளது.

பார்வை 2ல் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல் முறை ஆணையில் கீழ் கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு | உத்தேச மதிப்பீட்டுத் தொகை | நிதி ஒதுக்கீடுத் தொகை |
|---|---|---|---|
| **இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைநிரப்பு நிதி (2013–2014)** | | | |
| 1 | கவுண்டம்பாளையம் வார்டு எண்கள். 5 மற்றும் 6 | 307.00 லட்சம் | 200.00 லட்சம் |
| 2 | கவுண்டம்பாளையம் வார்டு எண்கள். 7,8 மற்றும் 9 | 330.00 லட்சம் | 266.62 லட்சம் |
| 3 | பில்லூர் II வது குடிநீர் திட்டம் மற்றும் ஆழியாறு குடிநீர் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் | 380.00 லட்சம் | 247.00 லட்சம் |
| **உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2013–2014** | | | |
| 4 | வீரகேரளம் வார்டு எண்கள்.18 மற்றும் 19 | 304.50 லட்சம் | 182.00 லட்சம் |
| 5 | வடவள்ளி வார்டு எண்கள்.16 மற்றும் 17 | 365.50 லட்சம் | 218.00 லட்சம் |
| | மொத்தம் | 1687.00 லட்சம் | 1113.62 லட்சம் |

தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகத்தால் மேற்படி திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை பின்வருமாறு கொடுக்கப்படுகிறது

| சிப்பம் .எண் | இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | கவுண்டம்பாளையம் வார்டு எண்கள். 5 மற்றும் 6 | 1241 லட்சம் |
| 2 | கவுண்டம்பாளையம் வார்டு எண்கள். 7,8 மற்றும் 9 | |
| 3 | பில்லூர் II வது குடிநீர் திட்டம் மற்றும் ஆழியாறு குடிநீர் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் | 874 லட்சம் |
| 4 | வீரகேரளம் வார்டு எண்கள்.18 மற்றும் 19 | 961 லட்சம் |
| 5 | வடவள்ளி வார்டு எண்கள்.16 மற்றும் 17 | 1179 லட்சம் |
| | **மொத்தம்** | **4255லட்சம்** |

எனவே, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகத்தால் கொடுக்கப்பட்டுள்ள விரிவான திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ **4255.00** லட்சத்திற்கு **5** சிப்பங்களாக பிரித்து பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பவும், ரூ **4255.00** லட்சத்தில் மானியத் தொகை ரூ **1113.62** லட்சம் போக மீதத் தொகை ரூ **3141.38** லட்சம் அரசு மானியமாகவும் மற்றும் பொது நிதியின் மூலம் பெறவும், மேலும் இத்திட்டத்தினை திட்ட மேலாண்மை குழுவின் (Project Management Unit) மூலம் பணிகள் மேற்பார்வையிட விருப்ப அறிக்கை (EOI) கோரி தேர்வு செய்யவும் மாமன்றஅனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.**648/2013**/எம்.டி.**1**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 336 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 42**

| | |
|---|---|
| பொருள் :- | நகர்நல மையம் - பொது சுகாதாரம் - பிரசவித்த தாய்மார்கள் மற்றும் பிறந்த குழந்தைகள் - நைட்டி மற்றும் குழந்தைகளுக்கான துணிகள் வழங்குவது – மாமன்ற அனுமதி வேண்டுவது – தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் ஒரு மாதத்திற்கு சுமார் 1540 பிரசவங்கள் ஆகிறது. இதில் தனியார் மருத்துவமனையில் 1022 பிரசவங்களும், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 402 பிரசவங்களும் மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் 116 பிரசவங்களும் ஆகிறது.

தனியார் மருத்துவமனைகளை ஒப்பிடும்போது, இம்மாநகராட்சியில் 7.5 சதவீதம் பிரசவங்களே நடைபெறுகிறது. இவ்வளவுக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக உள்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள், தகுதி வாய்ந்த மருத்துவர்கள் மற்றும் பயிற்சி பெற்ற மருத்துவ பணியாளர்கள் இருந்தும், தனியார் மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனையை பிரசவங்களுக்கு பொது மக்கள் நாடிச் செல்கிறார்கள். மேலும் ISO தரச்சான்று பெற்ற ஆறு அறுவை சிகிச்சை அரங்குகளுடன் கூடிய நகர்நல மையங்களும் இம்மாநகராட்சியில் செயல்பட்டு வருகின்றது.

எனவே தற்போது இம்மாநகராட்சியில் பிரசவங்கள் அதிகமான எண்ணிக்கையில் நடைபெறவும், பிரசவித்த தாய்மார்களின் உடல் ஆரோக்கியம் கருதியும் தாய்மார்களுக்கு முதல் மூன்று நாட்களுக்கு காலை பால், ரொட்டி, மதியம் முட்டையுடன் சாப்பாடு, இரவு டிபன் வழங்கப்படுவதைப் போல், மேலும் அவர்களின் அவசிய தேவையை பூர்த்தி செய்யும் விதமாகவும் கூடுதலாக 2 நைட்டிகள், குழந்தைகளுக்கான உடைகள் (3), 6 பேபி நாப்கின்கள், தாய்மார்களுக்கு சானிட்டரி நாப்கின் (2 பாக்கெட்) (10 கிராம்)மற்றும் 1 பேபி டவல் ஆகியவற்றை ரூ.631/-க்குள் வாங்கி வழங்க ஆண்டொன்றுக்கு சுமார் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் :- 12485/ 2013/ எம்.இ.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 337 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 43**

| | |
|---|---|
| பொருள் :- | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சிப் பகுதிகளில் உபயோகப்படுத்தி கழிவாகும் பிளாஸ்டிக் மற்றும் இதர பொருட்களை சாலையோரங்கள், பொது இடங்கள் மற்றும் கழிவுநீர் செல்லும் சாக்கடைகளில் போடுவோர்களுக்கு அபராதம் விதிப்பது –மன்றத்தின் அனுமதி பெறுவது- தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளை தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணமாகவும், செய்ய மாநகராட்சி பலவகை திட்டங்கள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

இருப்பினும் மாநகரில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பல இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டு கழிவாகும் பொருட்களான பிளாஸ்டிக், ஊசிகள், சிரஞ்சுகள் மற்றும் இதர மருத்துவக் கழிவுகள் உபயோகப்படுத்தப்பட்ட பேட்டரிகள், டியூப் லைட்கள், கைபேசி கவர்கள் போன்றவை பொது மக்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஆங்காங்கே குப்பைகள், குப்பைகள் அல்லாத பொருட்களை சேகரம் செய்ய அமைக்கப்பட்டுள்ள கண்டெய்னர் பெட்டிகளில் போடாமல் சுகாதாரத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் பல இடங்களில் கொட்டிவிடுகின்றனர்.

இதனைத் தடுக்கும் விதமாகவும், மாநகரின் தூய்மை மற்றும் சுகாதாரத்தை பேணும் வண்ணமாகவும் மேற்குறிப்பிட்டுள்ளபடி கழிவான பொருட்களை பொது இடங்களில் போட்டு சுகாதாரத்தை பாதிக்கும் வகையில் செயல்படுபவர்களுக்கு கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. | பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களை சாலையோரங்கள் மற்றும் சாக்கடைகளில் போடுபவர்களுக்கு அபராதம் | ரூ. 200.00 |
| 2 | உபயோகப்படுத்தப்பட்ட பேட்டரிகள், (கார்,ஆட்டோ,லாரி,பஸ் போன்றவை) பழுதான குழல் விளக்குகள் (Tube Lights) பழுதான மற்றும் உபயோகப்படுத்த முடியாத செல்போன்கள் மற்றும் கவர்கள் போன்றவற்றை போடுபவர்களுக்கு அபராதம் | ரூ.25000.00 |
| 3 | ஊசிகள், சிரஞ்சுகள் மருந்து பாட்டில்கள் மற்றும் மருத்துவ கழிவுகள் போன்றவற்றை போடுபவர்களுக்கு அபராதம் | ரூ.50,000.00 |

எனவே, மேற்கண்ட விதங்களில் அபராதம் விதிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். எண்.12708/2010/எம்.இ .5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 338 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 44**

பொருள்: நிர்வாகம் – கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – பள்ளிகளில் தேசிய பசுமைப் படை – காய்கறித் தோட்டம் அமைத்தல் – மண்புழு உரம் தயார் செய்தல் – திட்டம் செயல்படுத்துதல் – அதற்கான செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட நிர்வாக அனுமதி மற்றும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்பித்தல் சார்பு

-------

தேசியப் பசுமைப் படை / சுற்றுச்சூழல் மன்றங்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் தேசிய பசுமைப்படைத் திட்டத்தின் மூலமாக மாணவ மாணவிகளிடையே சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் சுற்றுசூழலை மாசுபடாமல் பாதுகாக்கவும் காய்கறி தோட்டம் அமைத்தல் மண்புழு உரக்குழி பராமரித்தல், மழைநீர் சேகரித்தல் ஆகியவை தொடர்பாக பள்ளிகளில் பயிற்சி வழங்குதல் போன்ற செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேற்காண் திட்டத்தின்படி இம்மாநகராட்சியில் 16 மேல்நிலைப்பள்ளிகளில் தேசிய பசுமைப் படை மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு திறந்த வெளி காய்கறித் தோட்டம் அமைக்கவும் மண்புழு உரம் தயாரிக்கவும் அதன்மூலம் பெறப்படும் கீரை வகைகள் மற்றும் காய்கறிகளை அந்தந்த பள்ளி சத்துணவு மையங்களில் மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு திறந்தவெளி காய்கறித் தோட்டம் அமைப்பது, மண்புழு உரம் தயாரிப்பது தொடர்பான செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட நிர்வாக அனுமதி மற்றும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.11734/2013/கே9

**மாநகர மன்ற தீர்மானம் எண் 339 நாள் 30.12.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 45**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2014-2017 மூன்றாண்டுகளுக்குகான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2014-2015-ஆண்டிற்கு 5 சதவீதம் உயர்வு செய்து புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக.

பார்வை
1. அரசு ஆணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள்.25.05.2009.
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 179 நாள் 17.12.2013

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட குத்தகைக்காலம் மூன்றாண்டு முடிவுற்ற கீழ்க்கண்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு, 2014-17ம் மூன்று ஆண்டுகளுக்கு மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படவேண்டும்.

(அ)

| வ. எண். | குத்தகை எண். | குத்தகை இனம் | குத்தகை காலம் |
|---|---|---|---|
| 1. | 40 | சிவானந்தாகாலனி நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2014-2017 |
| 2 | 35 | சத்தி ரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | “ |
| 3 | 60 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் புதிய நவீன கட்டணம் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | “ |
| 4 | 33 | ரேஸ்கோர்ஸ் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம். வசூலிக்கும் உரிமம் | “ |
| 5 | 79 | சீனிவாசபுரம் கல்யாணமண்டபம் பராமரிக்கும் உரிமம் | “ |
| 6 | 53 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | “ |
| 7 | 63 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டண வசூலிக்கும் உரிமம் | “ |
| 8 | 44 | வ.உ.சி பூங்கா சிறுவர் இரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | “ |
| 9 | 49 | தியாகி குமரன் மார்க்கெட் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | “ |
| 10 | 66 | குரு ஹோட்டல் நான்கு சக்கர வாகனம் கட்டண வசூலிக்கும் உரிமம். | “ |
| 11 | 102 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டண வசூலிக்கும் உரிமம் | “ |

(ஆ)

கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 2013-2014-ம் ஆண்டின் ஏலத்தொகையுடன் 5சதவீதம் உயா்வு செய்து மாமன்றத்தால் நிா்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். கால நீட்டிப்பினை தொடர மறுக்கும் குத்தகைதாரா்களின் வைப்புத்தொகை முதலிய அனைத்து தொகைகளை பறிமுதல் செய்தும் அவா்களின் பெயா்களை கருப்பு பட்டியலில் சோ்த்து இவ்வினங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவேண்டும்.

| வ. எண் | குத்தகை எண். | குத்தகைதாரா் பெயா் | குத்தகை இனம் | குத்தகை காலம் | 2013-2014-ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. | 2014-15-ம் ஆண்டு குத்தகைத் தொகை (5சதவீதம் உயா்வுக்கு பின்) ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 38 | திரு.எம். ஹரிகிருஹ்ணன் | சீனிவாசபுரம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 2403000 | 2523150 |
| 2 | 36 | திரு.ஏ.அஸ்கா்அலி | சத்தி ரோடு ஆடு மாடு அறுவை மனை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 669995 | 703495 |
| 3 | 64 | திரு.எம். ஹரிகிருஹ்ணன் | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 1322000 | 1388100 |
| 4 | 56 | திரு.ஏ.ரகோத்தமன் | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் தளம்எண்.1,2,3 மற்றும் 4 கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 1631000 | 1712550 |
| 5 | 57 | திரு.சி.செல்வம் | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் (B-3 காவல் நிலையம் அருகில்) கட்டண வசூலிக்கும் உரிமம். | 2013-2016 | 1710000 | 1795500 |
| 6 | 71 | திரு.முகமது ரபீக் | உக்கடம் பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 151000 | 158550 |
| 7 | 48 | திரு.பி.சங்கா் ரமேஷ் | தியாகி குமரன் கடைகளுக்கு கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 3110000 | 3265500 |
| 8 | 67 | திரு.எம்.ஏ.சபோ் அலி | உக்கடம் பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 1175000 | 1233750 |
| 9 | 75 | திரு.எம்.ஏ.சபோ் அலி | இராமா் கோவில் வீதி மாா்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 2765000 | 2903250 |
| 10 | 42 | திரு.கே.கோபால் சாமி | வ.உ.சி பூங்கா வளாகம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 399750 | 419738 |
| 11 | 51 | திரு.எம்.ஜெயபிரகாஷ் | தியாகி குமரன் மாா்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 801755 | 841843 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | 43 | திரு.டி.வாசுதேவன் | உப்பிலிப்பாளையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 152006 | 159607 |
| 13 | 58 | திரு.எஸ்ராஜேஸ்குமார் | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 2013-2016 | 710000 | 745500 |
| 14 | 69 | திரு.ஓ.ஏ.செய்யது இப்ராஹீம் | உக்கடம் பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 2013-2016 | 155000 | 162750 |
| 15 | 61 | திரு.வி. மணிவண்ணன் | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2016-2016 | 414000 | 434700 |
| 16 | 70 | திரு.வி.எம்.அப்துல்சுக்கூர் | உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 750000 | 787500 |
| 17 | 59 | திரு.எஸ்.வேலுச்சாமி | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 2013-2016 | 107100 | 112455 |
| 18 | 76 | திரு.முகமது ரபீக் | லிங்கப்பசெட்டி வீதி நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 261000 | 274050 |
| 19 | 68 | திரு.ஏ.அன்வர்பாஷா | டவுன்ஹால் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 1200000 | 1260000 |
| 20 | 34 | திரு.என்.செந்தில்குமார் | ஆம்னி பேருந்து நிலைத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 1102500 | 1157625 |
| 21 | 55 | திரு.கே.முனியான்டி | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (ஆர்.வி ஹோட்டல் எதிரில்) நவீன கட்டண கழிப்பிடம் | 2012-2015 | 641655 | 673738 |
| 22 | 46 | திரு.பி.செந்தில்குமார் | வ.உ.சி.பூங்காவில் உள்ள மிருக காட்சி சாலை நுழைவுக்கட்டணம் மற்றும் சிறுவர் விளையாடும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 2344335 | 2461552 |
| 23 | 45 | திரு.பி.ஏ,உசேன் | அவினாசி ரோடு பாஸ்போர்ட் அலுவலகம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 53550 | 56228 |
| 24 | 39 | திரு.எஸ்வேலுச்சாமி | சீனிவாசபுரம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 236250 | 248063 |
| 25 | 89 | உதயம் மகளிர் சுய உதவிக்குழு | சிவானந்தகாலனி அறிவியல் பூங்கா | 2012-2015 | 37800 | 39690 |
| 26) | 74 | திரு.எம்.சுலைமான் | உக்கடம் புதிய மீன்மார்க்கெட் கட்டண கழிப்பிடம் மற்றும் இரண்டு /நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 2013-2016 | 411000 | 431550 |
| 27 | 50 | திரு.ஏ.சிவக்குமார் | இராஜ வீதி மருந்தக வளாகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம். | 2013-2016 | 2250000 | 2362500 |

(அ) இனத்திற்கு ஏலத்தொகையுடன் வைப்புத்தொகையும் மற்றும் (ஆ)இனங்களுக்கு ஏலத்தொகையும், மேற்குறிப்பிட்டுள்ள (அ மற்றும் ஆ) அனைத்து இனங்களும் சேவைவரி, வருமான வரி. தொழில் வரி மற்றும் இதர வரிகளை செலுத்தவும் அதற்கான விளம்பர செலவுகளை ஏற்கவும் அனுமதி வேண்டி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 179 நாள் 17.12.2013-ன்படி அலுவலகக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் :11939/2013/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 340 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 179 நாள் 17.12.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 46

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.-73-ல் அரசு மருத்துவமனை எதிரில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்ததை 2013-2016-ம் ஆண்டிற்கான பொது ஏலத்தில் சேர்ப்பது -தொடர்பாக.

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் குறிப்பு உத்திரவு நாள்.29.06.2013.
2.வ.வி.நி.கு.தீர்மான எண்.84 நாள்.23.08.2013.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.73-ல் அரசு மருத்துமனை எதிரில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் 31.03.2013 வரை தனியார் மூலம் (DBOT) பராமரிக்கப்பட்டு வந்தது 01.04.2013 முதல் துறை மூலம் மத்திய மண்டல பணியாளர்களால் வசூல் செய்யப்பட்டு வருகிறது.எனவே இவ்வினத்தை வருடாந்திர ஏலத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை வைப்புப்தொகை சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.84 நாள்.23.08.2013-ல் மகளிர் சுய உதவிக்குழுவினர் மட்டும் கலந்து கொள்ளும் விதமாக பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமனறத்திற்குப்பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ.1,00,000/- |
| காப்புத்தொகை | -ரூ.50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் பதிலாக வங்கி உறுதி சான்றிதழ் | -ரூ.3,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் பதிலாக செலுத்திய வேண்டிய தொகை | -ரூ.75,000/- |

அலுவலக குறிப்பு : மாமன்றத்தின் ஒப்புதலுக்கு — ந.க.எண்.11130/2012/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 341 நாள் 30.12.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 84 நாள் 23.08.2013 ன் பரிந்துரையை ஏற்று பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி